திராவிடநாடு

18—3—62 | வார வெளியீடு | விலை 16 காசு

# எழுச்சியுற்றெழுவாய்!

[ முல்லைதாசன் ]

★

எடுப்பு

நலிவுறும் அடிமை ஒழியவே
நலமுறும் உரிமை ஓங்கவே
எழுச்சியுற் றெழுவாய் திராவிடா
ஏற்றமுற் றிடுவாய் திராவிடா

தொடுப்பு

நரி சிறக்கும் நற்பணியினால்
நாடெங்கும் இன்பம் பொலிவுறவே
கனிகுலவும் அறநெறியுடனே
கடமையைப் புரிவாய் திராவிடா (நலிவுறும்)

துயரினைக் கண்டு மருண்டிடா
துணிவினைக் கொண்ட திராவிடனே!
கண்ணினும் மேலாம் ஆற்றலென
கண்ணியம் தவறாத் திராவிடா! (நலிவுறும்)

முடிப்பு

கட்டவிழா மலர் மொட்டதும்
கவினுறும் காலச் சுழலினிலே
கடுமிடர் உன்னை நாடிடினும்
கட்டுப்பாட்டுடன் நில் திராவிடா (நலிவுறும்)

# 'என் குழந்தையா அது?'

[ கோ. சம்புமணிச்செழியன் ]

நண்பன் இளமுருகுவின் வற்புறுத்தலை என்னால் தடுக்கமுடியவில்லை. எத்தனை நாள்தான் நான் அவனை ஏமாற்றுவேன்? இந்த விடுமுறையின்போது நிச்சயம் என்னை அவன் விடவில்லை. விடுமுறைத் துவக்கத்திற்கு முதல்நாளே எனது அப்பாவிற்கு அவன் ஒரு கடிதம் எழுதிவிட்டு என்னைத் தன்னுடைய ஊரான செஞ்சிக்கு அழைத்துப் போனான்.

நண்பனின் ஊர் பார்க்கவேண்டியதாகவும், முருகுவின் அப்பா பழகுவதற்கேற்றவராகவும், அவனது அம்மா அன்பானவராகவும், அவனது தங்கை மேகலை விளையாடுதற்கேற்றவளாகவும், நண்பனின் தோப்பு எனது கற்பனையை வளர்ப்பதாகவும் அமைந்துவிட்டதால், நான் என் ஊரையும் மறந்தேன்; அங்கேயே திரிந்தேன். என்னை ஒரு 'எழுத்தாளன்' என்றே தன் நண்பர்கட்கு அறிமுகப் படுத்திவைத்தான்.

ஒருநாள் மாலை...! அவ்வூர் 'மாதர் சங்கத்' தலைவி மங்கையைப் பார்க்கச் சென்றிருந்தோம். அவர்களின் சொல்லாற்றலைப் பற்றி — செயல்களைப் பற்றி—முற்போக்கு எண்ணம் பற்றி ஆயிரம் கூறியிருந்தான். அறிமுகம் நடந்தேறியது; இரண்டு 'வணக்கங்கள்' உதிர்ந்தன. நான் எண்ணியதுபோல் அவர்கள் முப்பது அல்லது நாற்பது வயது அம்மையாராக இல்லை; 'அவளா'க இருந்தாள்.

அடுத்தடுத்துத் தொடரும் ஏடுகளைப்போல எங்கள் சந்திப்பும் தொடர்ந்தது; படிக்கப் படிக்கச் சுவைக்கும் தமிழ் இலக்கியம்போல், பழகப் பழக இனித்தது.எம்மிடையே ஏற்பட்ட ஏதோஒரு ஆற்றல்எங்களை நெருக்கிவிட்டது; பெயரிட்டே அழைத்துக்கொள்ளும் நிலையை அடைந்தோம்!

"உங்களது எண்ணங்கள், பிரமாதம்" — என்று பாராட்டுவாள்; "உங்கள் கதைகளைப் படிக்க நான் தவறியதில்லை."—என்பாள்; "உங்களின் முதல் கட்டுரை எது?"— என்று வினவுவாள்; "எப்படி இந்தக் கற்பனை உங்களிடம் சரணடைந்தது!"—என்று வியப்பாள்; "கவிதைகளை அதிகமாய் எழுதுங்கள்"– என்று அன்புக் கட்டளையிடுவாள். அப்பப்பா! அவள் தனது இனத்திற்கே உரிய பண்புடன் பேசிக்கொண்டே போவாள்.

எழுத்துத் துறையில் இவ்வாறு துவங்கிய எங்கள் வாதமும்,பேச்சும் அரசியல், சினிமா ஆகியவைகளில் புகுந்து ஓடியாடி,இறுதியில் காதலில் கலந்து அங்கேயே நின்றுவிட்டது.

மங்கையுடன் பழகினேன்; பழகினாள்; பழகினோம். இல்லை, இல்லை, விளையாடினோம். எங்களை நண்பன் அறிமுகப் படுத்திவைத்தது முதல் தவறு; அவள் அடிக்கடி என்னைச் சந்தித்தது இரண்டாம் தவறு;அவள் அழகியாய் இருந்தது மூன்றும் தவறு; அவள் என்னுடைய எழுத்தை விரும்பியது நான்காம் தவறு; முருகுவிற்கு மாந்தோப்பு இருந்தது ஐந்தாவது......அது எங்களை விளையாட அனுமதித்தது ஆறுவது......இப்படி யெத்தனை யெத்தனையோ தவறுகள் சேர்ந்துதான் எங்கள் உள்ளங்களில் ஒரு இனம்புரியாத அன்பை வளர்த்துவிட்டன.

"நானோர், விதவை, அழகேசன்." என்றிழுப்பாள். "தெரியும்" என்பேன். "சமுதாயம்......?"என்பாள்; "கவலையில்லை!" என்று முடிப்பேன். "திலகமிடாதவள் நான" என்பாள்; "திருந்திய அறிவு உன்னிடம் இருக்கிறதே!" என்று கூறுவேன். "பூச்சூடிக்கொள்ளக்கூடாதவள்"என்று கவலை கொள்வாள்; "அதனிலும் மெல்லிய உன் உடல் போதுமே!" என்று ஆறுதல் கூறித் தேற்றுவேன். "நமமுடைய திருமணம்..." என்று தொடங்கும்போதே, "விரைவில், மங்கை" என்று கூறி அவள் வாயை அடைத்துவிடுவேன்.

மங்கையுடன் நான் உறவாடிய போதெல்லாம் கற்பனை செய்வதில்லை; கற்பனையுலகிற்கே சென்றுவிடுவேன். அந்த இன்ப உலகிலே நான் எழுதாத இன்பங்களைக் கண்டேன்; மதுமயக்கம் கொண்டேன்; அதை இழக்கக்கூடாதென உறுதி பூண்டேன்.

நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் எங்கள் காதல் இணைந்து ஓடின; உறவாடின! வாய்கள் பாடின; எங்கள் காதல் உறவின் உயர்வைக் கண்டு மாங்காய்களும் வெட்கிச் சிவப்பதுபோலக் கனிந்து சிவப்பாய்த் தொங்கின. நண்பனும் சேதியறிந்தான்; தட்டிக் கொடுத்தான்.

மங்கையின் உலகிலிருந்து என்னை விடுவிக்க எனது தந்தையின் கடிதம் தேவைப்பட்டது. அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு 'செஞ்சிக் கோட்டையை யொத்த சுமையை' என்னிதயத்தில் ஏந்திக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். அப்பா, அதட்டினர், "ஏண்டா இவ்வளவு நாள்?" என்று; அம்மா ஆதரித்தாள், "நண்பன் இருக்கச் சொல்லியிருப்பான் இதற்குப்போய் நீங்க...!" என்றிழுத்தபடியே! தம்பியழுதான், "ஏன் என்னை அழைத்துப் போகவில்லை?" என்று! தங்கை கோட்டைபற்றிக் கதைகள் கேட்டாள்! ஒருவாருக இந்தச் சூழலிலிருந்துத் தப்பி மங்கைக்கும் முருகுவிற்கும் கடிதங்கள் தீட்டினேன்!

நாட்கள் சொல்லிக்கொண்டா போகின்றன? திடீரென்று எனது தேர்வில் நான் வெற்றிபெற்ற செய்தியை அறிந்தேன்! அந்தச்சேதி தெரிந்ததுமுதல் என் வீட்டில் எனது திருமணப் பேச்சு எழுந்து வளரத்தொடங்கியது. கடந்த பத்து மாதங்கட்கு முன் நான் பட்டம் பெற்றுவந்தேனே, அதுமுதல் இதுவரை எத்துணை எத்துணை நிகழ்ச்சிகள்? அவை அத்துணையும் சுவையாக அமைந்துவிடுவதில்லை!

அத்தை மகள் அல்லி—அழகி— பணக்காரி — படித்தவள்! அவளை மணக்கும்படி அப்பா வற்புறுத்தினர். நானோ மங்கையைப்பற்றிப் பேசி அவளையே மணப்பதாகவும் கூறிவிட்டேன்! இத்தகு திருமணங்கள் இடையூறின்றி நடந்துவிட்டால் அவைகட்கு மதிப்பேது? தடைகளை மீறிச் செல்வதில்தான் தனிச்சுவை இருக்கிறது! அச்சுவையை நானும் நுகர விழைவதில் தவறு என்ன?

அப்பாவிற்கு என் மனதை மாற்றுவதே கடமையாகப் போய்விட்டது. பாட்டியோ இரவில் ஆயிரமாயிரம் கதைகள், வரலாறுகள், வாழ்க்கைக் குறிப்புகள், புராணக்

( 4-ம் பக்கம் பார்க்க )

# நமது பணி

லர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (18—3—62 தனிப்பிரதி 16 காசு [ இதழ்

தேர்தலில் நாம் பெற்ற பெருவெற்றியினைக் கண்ட காங்கிரசாருக்கு இப்போது பெருங் கலக்கமும் குழப்பமும் ஏமாற்றமும் ஏற்பட்டுவிட்டது.

இனி நாம் வாளா இருத்தல் கூடாது. எப்பாடு பட்டாவது நம்முடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தி இவர்களை ஒழித்தாகவேண்டுமென்று குரலெழுப்பத் தொடங்கிவிட்டார்கள்.

பிரிவினைகோரும் ஒரு கட்சிக்கு இவ்வளவு ஆதரவு நாட்டில் இருக்கலாமா — இருக்கவிடலாமா? அது பெரும் ஆபத்தென்று ஆர்த்தெழுந்து ஆர்ப்பரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

எனவே, நாம் நம்முடைய பணியின் பொறுப்பினையும், அந்தப் பணி நமக்களித்துவரும் வெற்றிகளையும் எண்ணி மகிழ்ந்து, இதோடு நம் பணி முடிந்துவிட்டதென்று வறிதே இருந்துவிடாமல், முன்பிலும் மிகப் பொறுப்புடனும், கடமையுணர்ச்சியுடனும், கட்டுப்பாட்டுடனும், கண்ணியத்துடனும் பணியாற்ற வேண்டும் என்ற உறுதியினைக்கொண்டவர்களாக ஆக வேண்டும்.

"திராவிடநாடு திராவிடருக்கே!" என்று திராவிட முன்னேற்றக் கழகம் அறிவுறுத்தும் பிரகடனமானது, முடிவின்றியிருக்கும் நம் இனத்தின் ஆணிவேராகும்! பதின்மூன்று ஆண்டுகட்கு முன் விதைக்கப்பட்ட விதையானது, துளிர்த்து, கிளைத்து, செழித்து இன்று நாடு முழுமையும் பரந்த ஒரு பலம் பொருந்திய மரமாக வளர்ந்திருக்கின்றது!

தற்போது நாம் நம்முடைய முயற்சியினால் மரத்தினைக்காத்து — அதன் வேர் ஆழமாகப் பதியுமாறு செய்யவேண்டும். அன்றாட நிகழ்ச்சிநிரல், நாம் பேசும் பேச்சு அதற்கு எருப்போன்றதாகும்! காலப்போக்கிற்கு ஏற்றவாறு எரு மாறுமே தவிர, மரத்தினது தன்மையும் குணமும் மாறுவதில்லை! உடலின் நிலைக்கு ஏற்ப உணவு மாறுபடுமே தவிர, அதன் காரணமாக உடலிலிருக்கும் குருதியின் நிறமும், தன்மையும் மாறுவதில்லை!

நாம் கொண்டுள்ள கொள்கையானது காலநிலைக்கேற்றவாறு சிலசில மாறுதலையடைந்தாலும், உயிர் இலட்சியமான 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்கின்ற தூய கொள்கை மாறுபடுவதேயில்லை!

கழகம், எல்லாத் திராவிடர்களையும் அவர்களுடைய ஆழ்ந்த தூக்கத்தை விடும்படி செய்ய விரும்புகிறது! அவர் குறைகளெல்லாம் கனவுபோல மறைந்துபோகவும், அவர்களிடையே இருக்கின்ற ஒற்றுமையின்மையைப் போக்கவும், சிறந்த நாட்டுப்பற்றில் அவர்களை நம்பிக்கையுள்ளவர்களாக ஆக்கவுமே அது அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகின்றது!

கழகத்தின் கருத்துமிக்க இப்பணிக்குக் காரணம், திராவிடநாட்டை புகழின் உச்சியில் வைப்பதற்கு அவைகள் பயன்படும் என்பதைக் கழகம் உணர்ந்திருப்பதால்தான்!

இம் மண்ணுக்குச் சொந்தக்காரன் ஒரு காலத்தில் மங்காப்புகழுடன் விளங்கினான் உலகின்கண்! அந்நிலையை மீண்டும் காணவே தன் கருத்தை ஊன்றி வருகிறது நாட்டுமக்களிடையே! இதைச் சிலர் இன்று ஏளனம் செய்யலாம்—ஆனால், அவர்கள் எல்லோரும் நாளை ஏமாளிகளாகப்போகிறவர்கள் என்பதுதான் உலக வரலாறு!

வீரம் மிகுந்தவர்களாக—விழிப்புணர்ச்சி கொண்டவர்களாக இந்நாட்டு மக்களை விரைவில் காணவிரும்புகிறது கழகம்! எனவேதான் 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்ற மூல முழக்கம் எட்டுத் திக்கிலும் எதிரொலித்துக்கொண்டிருக்கின்றது இன்று!

அவ்வொலி கேட்டு எரிந்து தீய்வோருமுளர்! எதிரிகளாகி எதிர்பட்டதைக் கையிலேந்தி எதிர்க்கவருவோருமுளர்! எதற்கும் நாம் அஞ்சத் தேவையில்லை; காரணம், அவர்கள் சிலர்; நாம் பலர்!

எல்லாவற்றையும் ஒருமுனைப்படுத்தலே நம் கழகத்தின் குறிக்கோளாகும். பகலவன் தன்னைச் சுற்றிலும் அநேக கதிர்களை உடையவனாய் இருக்கின்றான். அவனுடைய ஒளி அலைகளுக்கு ஒளியைத் தருகின்றது. இவற்றின் உற்பத்தி கதிரவன் இருப்பதைப் பொருந்தியிருக்கின்றது. இங்ஙனமே நம் பணியும் இயற்கையின் நிலையைப் பெற்றிருக்கின்றது!

ஒரே உயிர் என்னும் கருத்து இன்னும் நாட்டில் சரியானபடி பரவியிருக்கவில்லை! இக்காரணம்பற்றியே, நாம் வெளியுலகில் காணப்படும் ஏனைய கருத்துக்களைப் புறக்கணித்துவிட்டு, திராவிடர்கள் அனைவரும் ஒன்று என்ற கருத்தினை நாட்டு மக்களிடையே உலவிவிட்டுக் கொண்டிருக்கின்றோம்!

நம் முன்னோர்களுக்காகவும், நாட்டினருக்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும் நாம் கடமைப்பட்டவர்களாவோம்!

நம்முடைய முன்னோர்களிடமிருந்து நாம் பெற்ற நாட்டினை செல்வமுறச் செய்தல்—அவர்களிடமிருந்து உரிமையாக்கிக்கொண்ட அறம்—பண்பு—கலை—நாகரிகம் இவற்றினை மேன்மையுறச் செய்தல்—செய்தபின் அவற்றினை அடுத்த நம் சந்ததிக்கு அளித்தல் ஆகிய

இவையாவும் நமக்கு வாழ்வில் மகத்தான கடமைகளாகும்!

தன்னுரிமையாட்சியினை நிலைபெறச் செய்து, அதனை அடுத்த நம் சந்ததிக்குத் தருவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்! இதுபோன்ற கடமையினை ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் ஒவ்வொரு தலைமுறைக்கும் செய்தல்வேண்டும்! காரணம், அடுத்த நம் சந்ததிக்கு மகிழ்ச்சியையும் — ஒளிமிகுந்த வாழ்வினையும் அளிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்!

இன்று நம் உரிமையாட்சி குலைந்திருக்கின்றது. நம் எண்ணம்–எழுச்சி–விடாமுயற்சி இவைகளைக்கொண்டு அதை உடனடியாக மாற்றித்தீர நாம் பாடுபடவேண்டும்! அப்போதுதான் நம் சந்ததிக்கு நாம் நன்றியுள்ளவர்களாவோம்!

நாம் குறுகிய உணர்வினால் உந்தப்பட்டவர்களல்லர்! வீழ்ந்த ஒரு சமுதாயத்தின் இழிநிலையை மாற்றி— ஒரு காலத்தில் வாழ்ந்து கெட்டவர்கள் என்று எடுத்துக்கூறும் பணியை மேற்கொண்டவர்கள்!

நம்முடைய சமுதாய ஒற்றுமையை, குடும்பப்பாசத்தோடு வளர்க்க முற்படுகிறவர்கள் நாம்! அந்த அனுபவத்தை நம் உள்ளங்கள் கண்டிருக்கின்றன!

நம்முடைய கொள்கையின் மேன்மையால், நம் உள்ளங்கள் ஒன்றோடொன்று ஒருமைப்பட்டிருக்கின்றன!

நம் நாட்டிற்காகவும், நம் இனத்திற்காகவும் பாடுபடத்தான் இம்மண்ணில் நாம் பிறந்திருக்கின்றோம் என்ற உறுதிப்பாட்டினை உள்ளத்தில் பதியவைத்து, எதிரிகள் கண்டு கலங்கி நிலைகுலையும் வகையில் நம்முடைய பணி தொடர்ந்து நடைபெறவேண்டும். ❋

# வருந்துகிறோம்

நமது நண்பரும், வடாற்காடு மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் இரா தருமலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி நாகரத்தினம்மாள் திடீரென்று எதிர்பாராதவிதமாக இயற்கை எய்திவிட்டார்கள் என்ற செய்திகேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

துணைவியை இழந்து துயருறும் தருமலிங்கம் அவர்களுக்கும், தாயைப் பிரிந்து தவிக்கும் குழந்தைகளுக்கும், உறவினருக்கும் நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கத்தைகள் கூறுவாள். எல்லாம் விதவையரின் இழிவையும், என்னையும் குத்திக் கொல்லும்!

"டேய், விதவைகளை மனைவியிழந்தவர்கள்தான் மணம் புரிந்துகொள்வார்கள்; மனைவியுள்ளவர்கள் வைப்பாட்டிகளாக்கிக்கொள்ளலாம்" — என்ற அப்பாவின் புதிய சட்டம் ஒருபுறம்; "உனக்கு இத்தனை வருடமாப் பணங்கொட்டிப் படிக்க வைத்தானே, உனது மாமன்? எதுக்கு? அல்லிக்கு உன்னைக் கட்டத்தானே?" — என்ற பாட்டியின் பல்லவி மற்றொருபுறம்; ஏண்டா அழகேசா! அல்லி உனக்கென்றே பிறந்தவளாச்சே! அவளையா வேண்டாமென்கிறாய்?" என்ற மாமாவின் குரல் மற்றொருபுறம்—"எனத்தான் எப்போது நம் மணம்?"—என்று சென்னையில் தன் அத்தையுடன் வசிக்கும் அல்லியின் கடிதக்குரல் இன்னொருபுறம் என்னை யிழுத்து அலைக்கழித்தன; அந்த அலைவெள்ளத்தில் மங்கையும், முருதுவும், மாமாத் தோப்பின் மயக்கு மொழிகளும் துரும்பாகி விட்டன என்றுதான் கூற வேண்டும்!

எனக்கிருந்த குழப்பமான நிலையில் எனது வாய் சரி என்றது; விரிவான முறையில் அப்பா மணவேலைகளைத்தொடங்கினார்! ஆமாம், அப்பா வென்றுவிட்டார்! மங்கைக்கு ஆறுதல் கடிதம் ஒன்றை எழுதியனுப்பிவிட்டதுதான் என் முதல் வேலை! ஆறுதலால் அடங்கிடக்கூடியதா அவள் சோகம்?

காலம் காற்றாய்ப் பறந்தது!

நான் எதிர்பார்த்தபடி நண்பன் முருதவும், எதிர்பார்க்காத விதவை மங்கையும் வந்து சேர்ந்தனர். நண்பனை 'வா'வென்றேன்; மங்கையை வெறித்துப் பார்த்தேன் — மலரில்லாத கூந்தல், திலகமில்லா நெற்றி, மஞ்சள் காணா முகம், கயிறிழந்த கழுத்து, வளையற்ற கரம், ஆமாம், ஆமாம், இத்தனையும் உண்மைதான்; ஏற்கனவே கண்டதுதான்! ஆனால்...! அந்தக் கைகளில் தவழும் குழந்தை? யார் அக்குழந்தை?

தனிமையில் மங்கையை நோக்கி என் ஐயத்தைப் போட்டேன், "நம் குழந்தைதான்" என்ற பதிலைத் திருப்பிப் போட்டாள்! பதிலா, அது? 'மங்கையை வாழவிடுமா இந்தச் சமுதாயம்?' — குழந்தை கேட்டது. அவளின் நெற்றியில் திலகமிலா நிலை குறித்து வருந்தாத சமுதாயம் —தகப்பன் பெயர் தெரியாத குழந்தைக்கு அவள் தாயான நிலை குறித்து வருந்தாமலிருக்குமா? என் மணத்தால் மனம் உடைந்து மரக்கிளையில் தொங்கும் மங்கை — அதை வெளியிடும் ஏட்டின் கொட்டை எழுத்துக்கள் இவை என் கண்முன்னே தோன்றி மறைந்தன. "நான் செய்தது சரியா?'!— என்று என்னுள்ளே பலமுறை கேட்டுக்கொண்டேன். உங்களின் செயலால் நான் அல்லலுறுகிறேனே!' என்று குழந்தை அழுதது. நாளை நான் மணநாள்...! நான் என்ன செய்யமுடியும்? காலம் கடந்துவிட்டது. "இல்லை மங்கை இல்லை...இது நம்குழந்தை இல்லை... உன் குழந்தை,....உன் குழந்தை," என்றுகூறிப் பறந்தேன், அவளின் கூக்குரலைக் கேட்க விரும்பாமல்!

நடுப்பகல்......! உறவினர்கள் சீட்டாட்டத்தையும், உறக்கத்தையும் துணையாக்கிக்கொள்ள நான் குழம்பிய மனதுடன் தனிமை நாடிச் சென்றேன். 'சிகரெட்' புகைபோல் சுழன்றுகொண்டிருந்த என் எண்ணச் சுழலில் 'அத்தான்' என்ற கல் வந்து விழுந்தது; அல்லி வந்துவிட்டாள்! வந்தவள் உடனே "மங்கை......" என்றாள். "அல்லி......!" — கத்திவிட்டேன்! "தெரியும் அத்தான்" என்றாள், திடுக்கிட்டேன்! அல்லிக்கு—எனது மனைவிக்கு எனது முதல் காதலியைத் தெரிந்திருக்கிறது!? "நீங்கள் தோட்டத்தில் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தேன்; என் அப்பாவைப்போல் நீங்களும்

(16-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

18—3—'62.

தம்பி !

எதிர்ப்புக்கண்டு அஞ்சவில்லை, ஏளனம் கேட்டு எரிச்சல்கொள்ளவில்லை, ஆபத்துகளைத் துரும்பென மதித்தோம், உயிரைத் துச்சமென்று கருதினோம், வெட்டுப்பட்டோம் குத்துப்பட்டோம், குருதி கொட்டினோம். உறுப்புகள் இழந்தோம், உடனிருந்தோர் கொல்லப்பட்டது கண்டோம், இரத்தச் சேற்றினில் புரண்டோம், பிணத்தின் மீது உருண்டோம், சிறகடித்து வரும் பெரும் பறவைகள், பிணமாகிக் கீழே வீழ்ந்துபட்ட நமது தோழர்களின் உடலைக் கொத்திடக் கண்டோம், கண்ணீர் கொப்பளித்தது, சொல்லொணாத கஷ்டங்களைக் கண்டோம், மனம் உடைய இடந்தரவில்லை, போரிட்டோம், போரிட்டோம், புனிதப் போரில் நமக்கே இறுதி வெற்றி என்ற நம்பிக்கையுடன் போரிட்டோம், பலன் இல்லை என்று ஒருசமயம் தோன்றும், பயம் மற்றோர் சமயம் நெஞ்சைத் துளைக்கும், பெருமூச்செறிவோம், எனினும் முன்வைத்த காலை பின்வைத்திட மாட்டோம் என்று சூளுரைத்துப் போர் புரிந்தோம், பொழுது புலர்ந்தது, பட்டபாடு வீண்போகவில்லை, எடுத்த காரியம் முடித்தோம் என்ற எண்ணம் வெற்றிக் களிப்பூட்டுகிறது, எந்த நோக்கத்துக்காகப் புனிதப்போர் நடாத்தினோமோ, மாடுமனை மறந்து மக்கள் சுற்றம் துறந்து, வாழ்க்கை இன்பம் இழந்து, கட்டாந்தரையையும், காடுமேடுகளையும் இருப்பிடமாகக் கொண்டு போரில் ஈடுபட்டு நின்றோமோ, அந்த நோக்கம் ஈடேறுகிறது, புனிதத் திருநகர் செல்கிறோம், உத்தமர் திருவடி பட்டதால் உயர்வு பெற்ற திருநகர் செல்கிறோம், அருளாளர் மலரடிபட்டதால் மகிமை பெற்ற மாநகர் செல்கிறோம், இம்மைக்கும் மறுமைக்கும் எவ்வழி நல்வழி காட்டிடுமோ அவ்வழி கண்டுரைத்தவர் கோயிலூர் செல்கிறோம், எந்த நகர்பற்றி எண்ணி எண்ணி ஏங்கிக்கிடந்தோமோ, அந்தப் புனிதபுரி செல்கிறோம், எமது புனிதபுரி எமக்கே சொந்தம், எமக்கு அது இறைவன் இல்லம், கருணைக் கோட்டம், இறவாப் புகழ்பெறு கோயில், ஆங்கு நாங்கள் செல்வது எமது உரிமை, அந்த உரிமையினை எவர் தடுத்திடினும் மடியநேரிடினும் சரியே, உரிமைபெறப் போரிடுவோம், உரிமையை இழந்தார்கள் உதவாக்கரைகள் என்று உலகம் இகழத்தக்க இழிநிலையுடன் உழன்றிட மாட்டோம், கழுகு எமது உடலைக் கொத்தட்டும், கவலையில்லை; 'புனிதபுரி எமது' எனும் முழக்கமிட்டபடியே வெட்டுண்டு வீழ்வோம் என்றெல்லாம் சூளுரைத்து எந்த நோக்கத்துக்காகச் சமர் நடாத்தினோமோ, அந்த நோக்கம் ஈடேறுகிறது புனிதபுரி சென்றிடும் உரிமை நம்முடையதாகிறது, இதோ புனிதபுரி செல்கிறோம்! — என்று எண்ணியபடி அந்த அணிவகுப்பு, பெருமிதத்துடன், களிநடமிடுவதுபோல ஜெருசலம் எனும் புனிதபுரிக்குள் செல்கிறது.

# அறுவடையும்—அணிவகுப்பும்

[ 2 ]

நுழைவு வாயிலுக்கு வெளியே நிற்கிறான், உரிமை பெற்றோம் என்ற எக்களிப்புடனும், புனிதபுரியைக் காணச் செல்கிறோம் என்ற பெருமைமிகு உணர்ச்சியுடனும் உள்ளே நுழையும் அணிவகுப்பினைக் கண்டபடி, கண்ணீர்த்துளிர்க்கும் நிலையுடன், இஃதன்றோ வெற்றி, இவரன்றோ வீரர், இதுவன்றோ புனிதப் போர், என்றெல்லாம் எண்ணியபடி, விம்மிடும் நெஞ்சுடன் நிற்கிறான், அணிவகுப்பை நடத்திச் சென்றவன்.

அணிவகுப்பு, புனிதபுரிக்குள் நுழைகிறது.

அணிவகுப்பினை நடத்திவந்தோன் அதனைக்கண்டு அகமிக மகிழ்கிறான்.

புனிதப்போரிலே வெற்றிக் கட்டம்—உரிமை தரப்படுகிறது, கடும் போரிட்டு உரிமையினைப்பெற்ற வீரர் குழாம், புனித நகருக்குள் செல்கிறது; காண்கிறான் காணவேண்டுமென்று நெடுங்காலம் எண்ணிய காட்சியை; வெற்றி வீரர்கள் செல்கிறார்கள் வீரநடையுடன், புனிதபுரிக்குள் என்பதை எண்ணுகிறான்; உடல் புல்லரிக்கிறது; களத்திலே ஏற்பட்ட கஷ்டமத்தனையும் பழத்தை மூடிக்கொண்டிருக்கும் தோல் என்று எண்ணிடத் தோன்றுகிறது; உலகு அறியட்டும், உறுதியுடன் உரிமைப்போர் நடாத்துபவர் வெற்றிபெற்றே தீருவார்கள் என்ற உண்மையை என்று மெள்ளக்கூறிக் கொள்கிறான்; அணிவகுப்பு புனிதபுரிக்குள் செல்கிறது, அதனைக்கண்டு களிப்புடன் நுழைவு வாயிலில் அணிவகுப்பினை நடத்திவந்தவன் நிற்கிறான்—ஆனால் அவன் உள்ளே செல்லவில்லை!!

புனிதபுரியாம் ஜெருசலம் நகருக்குள், அணிவகுப்பு செல்லலாம் — அந்த உரிமை அவர்கட்கு உண்டு— என்று மாற்றார் கூறினர் — ஆனால் ஒரே ஒரு நிபந்தனை, அணிவகுப்புத்தான் செல்லலாம், அதனை நடத்திச் செல்பவன், ஜெருசலம் நகருக்குள் செல்லக்கூடாது—என்று கூறிவிட்டனர்,

எனவே, அணிவகுப்பு புனிதபுரிக்கு உள்ளே சென்றது; அதனை நடத்திச்சென்ற ரிச்சர்டு, ஜெருசலம் நகர நுழைவு வாயலில் நின்றுகொண்டிருந்தான்.

புனிதப்போர், ஜெருசலம் நகருக்காக, பல ஆண்டுகள் நடைபெற்றது. இஸ்லாமியருக்கும் கிருஸ்தவர்களுக்கும் நடைபெற்ற அந்தப் போருக்கு, வேறுபல காரணங்களும் இடையிடையே வந்து இணைந்துகொண்டன; பல வீரக் காதைகளைத் தன்னகத்தே கொண்டதாக அந்தப் புனிதப்போர் வடிவெடுத்தது. அரசுகள் பல இதிலே ஈடுபட்டன. அழிவு பற்றிய கவலையின்றி அஞ்சா நெஞ்சினர் அணி அணியாக, அலை அலையாகக் கிளம்பினர்; உலகமே கிடுகிடுக்கத் தக்க பயங்கரச் சண்டைகள் நடைபெற்றன; முடிகள் உருண்டன, நகர்கள் நாசமாயின, பிணமலை எங்கெங்கும்; அப்படிப் பட்டதோர் புனிதப்போரில், இஸ்லாமியர்களைத் தலைமை வகித்து நடத்திச்சென்ற இணையில்லா வீரனாகச் சாலடின் எனும் மாமன்னன் விளங்கினான்; கிருஸ்தவர் தரப்பில் கிளர்ந்தெழுந்து வீரப்போரிட்ட மாபெருந் தலைவன் என உலகு புகழ் நிலைபெற்றான் இங்கிலாந்து நாடு ஆண்ட, ரிச்சர்டு என்பான்! அரிமா நெஞ்சு அவனுக்கு என்று சிறப்புப் பெயரிட்டு அழைத்திடத்தக்க முறையில் ஆற்றல்மிக்கோனாக விளங்கினான் ரிச்சர்டு.

புனிதப் போரிலே ஒரு கட்டம்தான், ஜெருசலம் நகருக்குள் கிருஸ்தவர்கள் செல்லலாம் என்று சாலடீன் அனுமதி அளித்து, போர் நிறுத்த ஏற்பாட்டுக்கு இசைவு அளித்தது.

அந்தப் போர்நிறுத்தக் கட்டத்தின்போதுதான், உரிமை கிடைத்தது என்ற உவகையுடன் புனித புரிக்கு உள்ளே கிருஸ்தவர்களின் அணிவகுப்பு பெருமிதத்துடன் நுழைந்தது.

ஆனால், அந்த அணிவகுப்பை நடத்திச் சென்ற ரிச்சர்டு, ஜெருசலம் நகருக்குள் செல்லவில்லை.

போர் நிறுத்த ஏற்பாட்டுக்கும் ஜெருசலம் நகருக்குள் கிருஸ்தவர்களின் அணிவகுப்பு நுழைவதற்கும் இசைவு அளித்த சாலடீன், ஒரு நிபந்தனை விதித்திருந்தான்—அந்த நிபந்தனைதான், அணிவகுப்பு மட்டும்தான் ஜெருசலம் நகருக்குள் நுழையலாமே தவிர, அதனை நடத்திவந்த ரிச்சர்டு, புனிதபுரிக்குள்ளே நுழையக் கூடாது என்பதாகும்.

எனவேதான், அணிவகுப்பு ஜெருசலம் நகருக்குள்ளே நுழைந்தது; நகர நுழைவு வாயிலுக்கு வெளியே நின்றுகொண்டிருந்தான், ரிச்சர்டு!

உள்ளே நுழைந்தவர்களுக்கு, நுழைவு வாயிலில் ரிச்சர்டு நிறுத்தப்பட்டுவிட்டானே என்ற கவலைதான்; வெளியே நிறுத்தப்பட்டுவிட்டவனுக்கோ, புனிதபுரிக்கு உள்ளே நுழையும் உரிமை அணிவகுப்புக்கு கிடைத்து விட்டது என்ற களிப்பு.

தம்பி! தோற்றுக்கிடக்கும் நேரத்திலேதான் இவனைத் தாக்கி மகிழ்ச்சி பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற சிறுமதிபடைத்தவர்கள், இதனைக்கூடத் திரித்துக் கூறி, பார்! பார்! இவன் தன்னை ரிச்சர்டு எனும் மாவீரனுக்கு இணையாக்கிக்கொள்கிறான்!! என்று பேசக் கூடும்.

என்னை ரிச்சர்டு நிலைக்கும் நான் உயர்த்திக் கொள்ள இதனை எழுதவில்லை; இதனைப் படித்துவிட்டு மாற்றார்களும் தங்களை சாலடீனுடன் ஒப்பிட்டுக் கொண்டுவிடவேண்டாம்.

அணிவகுப்பு உள்ளே நுழையும் உரிமை பெற்ற நேரத்தில், அதனை நடத்திச்சென்றவன் மட்டும், உள்ளே நுழையக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டால் அந்த நிகழ்ச்சி எத்தகைய உள்ள நெகிழ்ச்சியைத் தருமோ அப்படிப்பட்ட உள்ளநெகிழ்ச்சி, நம்மில் ஐம்பதின்மர் சட்டமன்றம் சென்று அமர்ந்திடும் வேளையில், என்போன்றூர் உடன்செல்லமுடியாமல், வெளியே நிறுத்திவிடப்பட்டிருப்பதனுல், ஏற்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட மட்டுமே இதனை எழுதினேன்.

உள்ளத்துக்கு நெகிழ்ச்சியை மட்டுமல்ல, புதியதோர் உறுதியையும் தரத்தக்கதாக இத்தகைய நிகழ்ச்சிகளை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதனைக் கூறவும் இதனை இங்கு குறிப்பிடுகிறேன்.

இதோ நாம் நுழைகிறோம் புனித புரிக்குள்! ஆனல் நம்முடன் வந்திருக்கவேண்டியவர்களிலே பலர் வரவில்லையே, என்ற ஏக்கம், செயலற்ற நிலைக்கு அல்ல, செயலை விறுவிறுப்பு மிக்கது ஆக்கிக்கொள்ளப் பயன்படவேண்டும்.

அவர்களும் வந்திருந்தால்... அவர்களும் உடன் இருந்தால்... என்ற எண்ணம் எழாமலிருக்காது; நமக்குள் உள்ள குடும்பபாசம் அத்தகையது; நமது பொலிவுக்கும் வலிவுக்கும் அஃதே அடிப்படை; எனினும் அந்த எண்ணம், நாம் மட்டும் வந்து என்ன பலன்? என்ற முறையில் வடிவெடுக்க இடம் தரக்கூடாது. நாம் வந்திருக்கிறோம், அவர்கள் வரவில்லை; அவர்களும் வந்திருந்தால் எத்தகைய முறையிலே பணி செம்மையாக இருந்திருக்குமோ என்ற கவலை எவருக்கும் எழாத படியான தரத்திலும் அளவிலும் நம்முடைய பணி அமையவேண்டும் என்ற உறுதியுடன், ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றல் அவ்வளவையும் பயன்படுத்திக் கூட்டுச் சக்தியாக்கிப் பணியினைச் சிறப்புடையதாக்க வேண்டும்.

நடத்திச் செல்பவனை இழந்தும் ஒரு அணிவகுப்பு பணிபுரிய இயலும் — தமக்குள்ளாகவே நடத்திச் செல்பவரைப் பெறமுடியும்.

ஆனல், அணிவகுப்பு இன்றி, நடத்திச்செல்பவன் மட்டும், தப்பித் தவறி, தட்டுத்தடுமாறி, உள்ளே நுழைகிறுன் என்று வைத்துக்கொள் தம்பி! எப்படி இருக்கும் அந்தக் காட்சி? கண்ருவியாக இருக்கும்!!

நடத்திச் செல்பவனை இழந்த அணிவகுப்பைக் காண்போர், ஆச்சரியப்படுவர்!

அணிவகுப்பினை இழந்த நடத்திச் செல்பவனைக் காண்போர், கேலிசெய்வர்!!

நடத்திச்செல்பவனற்று ஒரு அணிவகுப்பு இருந்து விடாது; நடத்திச்செல்பவர் ஒருவரைக் கண்டுபிடித்து விடும்.

அணிவகுப்பினை இழந்த தலைவன், மாயமந்திர வேலைகளால் உடனே மற்றோர் அணிவகுப்பை உண்டாக்கிக்கொள்ள முடியாது.

எனவேதான், தம்பி! அணிவகுப்பு அடையும் வெற்றிதான், மிக முக்கியமே தவிர, நடத்திச் செல்பவன் ஈட்டிடும் வெற்றி அவ்வளவு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல; கோபுரம்தான் முக்கியம், கலசம் அல்ல! கலசமும் இருந்திருந்தால் அழகாகத்தான் இருக்கும்; ஆனல் கோபுரமின்றிக் கலசம் இருந்தால் கேலிக்கூத்தாக அல்லவா இருக்கும். அதுபோலத்தான் என்போலச்சிலர், உள்ளே வரமுடியாமற் போனது.

இதனை நான், வெறும் மன ஆறுதல் அளிக்கக் கூறுகிறேன் என்று எண்ணிக்கொள்ளாதே. தம்பி! இதற்கு ஊடே இருக்கும் தத்துவத்தை விளக்குவதற்காகவே கூறுகிறேன்.

காங்கிரசுக் கட்சியினர் கோபுரத்தைத் தகர்க்கத் திட்டமிட்டனர்; தம்மிடம் கிடைத்த அழிவுக் கணைகளை ஏவினர்; அவர்கள் கண்டபலன், கலசம் பெய்த்தெரியப்பட்டதுதான்; கோபுரம் அல்ல!

ஐம்பது கழகத் தோழர்கள் சட்டமன்றத்தில்! அணிவகுப்பு உள்ளே நுழைந்துவிட்டது! வெளியே நிறுத்திவைக்கப்பட்டுவிட்ட என்போன்றூர்களைக் காணும்போது, மாற்றுர்களுக்கு ஒரு கணம் சிரிப்புப் பொங்குவது இயற்கை; பல இலட்சம் செலவிட்டு அவர்கள் இந்தப் பலனைக்கூடவா சுவைக்கக்கூடாது!—ஆனல் மறுகணமோ, ஐம்பதுபேர்! ஐம்பதுபேர்! நாலில் ஒருபகுதி!! என்ற எண்ணம் கொட்டுகிறது; துடியாய்த் துடிக்கிருர்கள்.

இந்த ஐம்பதின்மருடன் பாராளுமன்றத்துக்கு எழுவரையும் சேர்த்து வெற்றிபெறச் செய்த நமது கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், ஜனநாயகப் பண்புப் பொருள் பெற்றுகவேண்டும் என்பதற்காக நம்முடன் துணை நின்றவர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

வெற்றி ஈட்டித்தர இயலாது போயினும், மற்ற இடங்களிலும் வெற்றிபெற்றுகவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டனர் நமது தோழர்கள். அவர்களுக்கும் என் நன்றி.

சொல்லப்போனல், வெற்றிபெற்றிருக்கிற இடத்திலே பணியாற்றிய நமது கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், நண்பர்களும், வெற்றிக் களிப்புப்பெற்று, பட்டகஷ்டம் அத்தனையும் மறந்துபோன நிலையில், ஏறு நடைபோட்டு எக்களிப்புடன் இருக்க முடிகிறது.—

அரைத்தெடுத்த சந்தனத்தை மார்பில் அணிந்து கொண்டதுபோன்ற மகிழ்ச்சி இருக்கும்போது, அரைத்தபோது தோன்றிய வலி மறந்தேபோய்விடுகிறது அல்லவா!—அதுபோல!! கொஞ்சுகிருள் பார், கொழுப்பொம்மையைப்போலக் குழந்தையைத் தூக்கி வைத்கொண்டு! இன்று! அன்று? அடேயப்பா! என்ன அலறல்! எவ்வளவு அழுகை! வேண்டாமே! வேண்டவே வேண்டாமே! குழந்தையே வேண்டாமே!! என்றெல்லாம் கூச்சலிட்டாள்! இன்று ராஜாவாம் ரோஜாவாம்! கொஞ்சுகிருள் குழந்தையிடம்—என்று பொக்கைவாய் மூதாட்டி கேலிபேசுவது உண்டல்லவா, குலக்கொடியைப் பெற்றெடுத்த கோமளத்தைப்பார்த்து. அதுபோல, வெற்றி பெற்ற இடத்திலே, மனதுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி மாற்றுர்களைப் பார்க்கிறபோது ஏற்படும் பெருமித உணர்ச்சி போதும் எத்துணை கஷ்டநஷ்டத்தையும் ஈடுசெய்துவிடும். எனவே, வெற்றிபெற்ற இடங்களிலே, பணியாற்றினவர்களுக்குக்கூட, அதிகமாகப் பாராட்டும், நன்றியறிதலும் கூறத்தேவையில்லை.

பாடுபட்டும் பலன் காணுததால், மனம் உடைந்து, மாற்றுர் முன் எப்படி நடப்பது என்று வேதனையுடன் இருக்கிருர்களே, தோற்றுப்போன இடங்களிலே பணியாற்றியவர்கள்—அவர்களுக்குத்தான் ஆறுதல் கலந்த நன்றியறிதலை அதிகமான அளவு கூறவேண்டும். அவர்கள், பணியாற்றியபோது என்னென்ன இன்ப நினைவுகள் அவர்கள் மனதிலே அலைமோதினவோ! எத்தனை இரவுகள் இன்பக் காட்சிகளைக் கனவாகக் கண்டனரோ! எத்தனை எத்தனை பேர்களிடம் வெற்றி நிச்சயம்! வெற்றி உறுதி!!—என்றெல்லாம் பேசிப்பேசி மகிழ்ந்தனரோ!—பரிதாபம்—அத்துணையும் மண்ணுகி, அவர்கள் மனம் எரிமலையாகி, கண்கள் குளமாகி, பேச்சு பெருமூச்சாகி, நடை தளர்ந்து, உள்ளனர்; கதிர்விடும் அளவு வளர்ந்த பயிர் திடீரெனக் காய்ந்துபோகக் கண்ட உழவன் மனம் என்ன பாடுபடுமோ, அதுபோல இருக்கும் அவர்கள் மனம். அவர்களுக்குத்தான், தம்பி! நாம் அனைவரும் அதிகமான அளவிலே ஆறுதலும் நன்றியறிதலும் அளிக்கவேண்டும். வெற்றி கிடைத்திருந்தால், வேதனை தாஞகப் போய்விட்டிருக்கும். இவர்களுக்கோ, பாடுபட்ட அலுப்புடன் பலன்காணு வேதனையும் சேர்ந்து, வாட்டுகிறது; வதைபடுகிருர்கள்.

வெற்றிகிடைத்த இடத்திலுள்ளவர்கள், வேலையில் மும்முரமாக ஈடுபட்டபோது குடும்பத்திலே குதூகலமாகப் பேசி மகிழ்வதை இழந்தனர், என்ருலும், இப்போது, பேசிப் பேசி மகிழலாம், கணக்குப் போட்டுக் காட்டிக் காட்டிக் களிப்படையலாம்; என் பேச்சு எப்படி என்று கூறி எக்களிப்புக் கொள்ளலாம்; எனக்கு அப்போதே தெரியும் என்று ஆரூடம் அறிந்தவர்போலப் பேசிச் சிரிக்கலாம்!! ஆனல் தோற்றுப்போன இடத்தில் பணியாற்றியவர்களின் நிலை? வேலை செய்தபோதும் வேதனை! இப்போது அதனைவிட அதிக வேதனை! முன்பு வேலை மிகுதியால், வேளா வேளைக்குச் சரியாகச் சாப்பிடுவதில்லை, தூக்கம் இல்லை, ஓய்வு இல்லை, நிம்மதி இல்லை; இப்போது, வேலை பலன் தராததாலே ஏற்பட்ட வேதனையால், பசியில்லை, தூக்கமில்லை, மன நிம்மதி இல்லை, எவரிடமும் உரையாட விருப்பம் எழவில்லை, காரணமின்றிக் கோபம் வருகிறது, கண்டவர்மீது சந்தேகம் கிளம்புகிறது, எதிலும் ஓர் அருவருப்பு ஏற்படுகிறது, தன்னம்பிக்கைகூடக் குறைகிறது.

பாடுபலவும் பட்டுவிட்டு, இந்த நிலையையும் தாங்கிக் கொள்வது என்ருல், உள்ளபடி கடினமல்லவா? எனவே அவர்களே, நமது ஆறுதலையும் நன்றியறிதலையும் பெறும் முதல் உரிமை, முழு உரிமை பெற்றவர்கள்.

வேலை முறையிலே தவறுகள் இருக்கலாம், போட்ட கணக்குகள் பொய்த்துப்போயிருக்கலாம், நம்பினவர்கள் மோசம் செய்திருக்கலாம், நயவஞ்சகம் இதுவென அறிந்துகொள்ளும்திறமை குறைவாக இருந்திருக்கலாம்—ஆனல் பணியாற்றியவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி, பட்ட கஷ்டம், கொண்ட ஆசை, ஏற்படுத்திக் கொண்ட நம்பிக்கை, இவைகளை எவர் மறக்கமுடியும், எப்படிக் குறைத்து மதிப்பிடமுடியும்.

எத்துணையோ தொல்லைகளைத் தாங்கிக்கொண்டனர்.

வசதிக் குறைவுகளுக்கு இடையே உழன்றனர்.

பகை கக்கினர் பலர்; பொருட்படுத்தவில்லை.

பொய் வழக்குகள் தொடுத்தனர்; பொல்லாங்கு மூட்டினர்; காலிகளை ஏவிவிட்டனர்; கத்தி காட்டி மிரட்டினர்; வழிமடக்கி அடித்தனர்; வேலையைப் பறித்தனர்; வீட்டில் கலகம் மூட்டினர்; அம்மம்மா! ஒன்றல்ல இரண்டல்ல, அவர்களைக் கொட்டிய கொடுமைகள். அத்தனையையும் தாங்கிக்கொண்டு, ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, அனைவரிடமும் பணிவாக நடந்து, பணியாற்றினர்—கழகம் வெற்றிபெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக எந்தப் பழியையும் இழிவையும் தாங்கிக்கொள்ளத்தான்வேண்டும் என்ற உறுதியுடன்—தியாக உணர்வுடன்.

அதிலும், தம்பி! காஞ்சீபுரம் தொகுதியிலே, வேளைக்கு ஒரு சேதி வெடித்து வரும்; அந்த ஊர் தலைவர் அவர்கள் வண்டியிலே ஏறிவிட்டாராம்! இந்த ஊர் மணியக்காரரை இரவு 12 மணிக்கு இலுப்பைத் தோப்பிலே சந்தித்து 200 ரூபாய் கொடுத்துவிட்டார்களாம்! இவருக்கு அவர் கடன் கொடுத்திருக்கிருராம், ஆகவே அங்கு கட்டுப்பட்டுப் போய்விட்டாராம்!—என்றெல்லாம்

திகில் தரும் செய்திகள் வரும். கேட்ட எவருக்கும் 'கை ஓடாது கால் ஓடாது'. மனம் பதை பதைக்கும்; கிளம்பிய சேதிகள் உண்மைதான் என்பதைக் காட்டும் குறிகள் தெரியும்! என் செய்வர், நமக்காகப் பணி யாற்றுவோர்! முதலில் தங்களைத் திகிலிலிருந்து விடு வித்துக்கொள்ளவேண்டும், பிறகு பணி! தொடர்ந்து! சோர்வை மறைத்துக்கொண்டு!!

தானிய வியாபாரிகளெல்லாம், கிளம்பிவிட்டார்கள் கிராமம் கிராமமாக!''—என்பார் ஒருவர்.

தானிய வியாபாரிகள் கிளம்பினுல் என்ன? என்று கேட்பார் இன்னொருவர்.

ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களுக்குக் கொடுக் கல் வாங்கல் தொடர்பு இருக்கிறதே. அவர்கள் பேச் சுக்குப் பலர் கட்டுப்படுவார்களே! — என்று விளக்கம் அளிப்பார், இன்னொருவர்.

எனக்கு இதெல்லாம் தோன்ருது. நாம் என்ன கெடுதல் செய்தோம் இவர்களுக்கு? மனதாலும் கெடு தலை எண்ணியதில்லையே. ஏன் இவர்கள் நம்மை எதிர்த்து வேலை செய்கிருர்கள்! நாம் ஏதாவது இவர் கள் மனம் புண்படும்படி, வெறுப்புக்கொள்ளும்படி நடந்துகொண்டோமா? கிடையாதே! அப்படியிருக் கும்போது. நம்மிடம் இவர்கள் பகை காட்டுவானேன்? புரியவில்லையே! என்று எண்ணிப் பெருமூச்செறிவேன். தானிய வியாபாரிகள் மட்டுமல்ல. ஒவ்வொரு நாள் ஒவ்வொரு வகையான வியாபாரிகளைப் பற்றி இப்படிச் செய்தி வரும். காரணம் எனக்கு இன்னமும் புரியவில்லை, எதற்காக இவர்கள் என்மீது இவ்விதமாகப் பகை காட் டினுர்கள் என்பதற்கு. என்னை வீழ்த்தி அவர்கள் அடையப்போகும் பலன்தான் என்ன என்றும் எனக்குப் புரியவில்லை.

தம்பி! கிரேக்க நாட்டிலே ஒரு 'முறை' இருந்தது— 'முறை' என்றுகூட அதைக் கூறுவதற்கில்லை, — ஒரு 'நடவடிக்கை' என்று மட்டுமே கூறலாம். ஆங்கிலத் திலே, அதனை Ostracism—ஆஸ்ட்ரசிசம் என்பார்கள்.

விரட்டி அடிப்பது என்று பொருள் கொள்ளலாம். கெட்டவர்களை அல்ல, தம்பி! வேதனை கலந்த வேடிக்கையைக் கேள், நல்ல வர்களை விரட்டி அடிப்பது! நல்லவர்களை விரட்டி அடிப்பதா? ஏன்? என்றுதானே கேட்கிருய். நல்லவர்களை வளரவிட்டால், பிறகு அவர்கள் மிகமிக அதிகமாக வளர்ந்துவிடுவார்கள்; பிறகு அவர்களுக்கு நிகர் யாருமே இல்லை என்று ஆகிவிடும்; பிறகு ஆபத்து உண்டாகுமல்லவா? அதனுல், மிக நல்லவர்கள் என்ற நிலைக்கு யாரேனும் வளருகிருர்கள் என்ருல், அவர்களை ஊரைவிட்டு விரட்டிவிடவேண்டும் — என்று வாதாடி, விளக்கம் அளித்தனர். அப்படிப்பட்ட நடவடிக்கை கிரேக்க நாட்டிலே நடைபெற்றது.

நாட்டுக்கு நாசம் விளைவிக்கக்கூடியவர்களை விரட்டி அடிப்பது என்று துவக்கப்பட்ட நடவடிக்கை நாளாவட் டத்திலே கெட்டுக்கெட்டு, நல்லவர்களை, செல்வாக்கு மிக்கவர்களை, எல்லோரும் பாராட்டத்தக்கவர்களை, விரட்டி அடித்திடும் முறையாக உருவெடுத்தது.

ஆதென்சு நகர அரசியலில் இடம் பெறவும் ஆதிக் கம் செலுத்தவும் விழைவுகொண்டோர், ஊராரின் நன் மதிப்பைப் பெறத்தக்கவராக, நல்லவராக எவரேனும் புகழ்பெறுகிருர் என்ருல், ஊரிலே அவர்கள் உள்ளமட் டும் தமக்கு அரசியலில் இடம் கிடைக்காது என்று எண்ணி, அவர்களை விரட்டி அடிக்க முனைந்தனர்.

இதற்கும் மக்களின் வாக்குரிமை பயன்பட்டது.

ஆதென்சு நகர மக்களில் 6000-பேர் கூடி வாக் களித்துவிடலாம், இன்னுர் ஊரிலே இனி இருக்கக் கூடாது என்று; அந்த வாக்கெடுப்பு முடிந்ததும், அவர் கிரேக்க நாட்டைவிட்டுச் சென்றுவிடவேண்டும்.

கொலை, கொள்ளை, சதி, கற்பழித்தல்போன்ற குற் றங்களைப் புரிந்திருந்தால், வழக்குத்தொடுத்து, விசா ரணை நடத்தித் தண்டிக்கலாம். அதற்கான முறைகள், சட்டதிட்டங்கள் இருந்தன.

ஆஸ்ட்ரசிசம் எனும் விரட்டி அடிக்கப்படும் முறை யில் இன்ன குற்றம் இவன் செய்தான் என்று வழக் குத்தொடுப்பது இல்லை; இவன் இங்கு இருக்கவேண்டாம் என்று கூறப்படும். ஏன்? என்று கேட்டால், இவன் ஆபத்தானவன். இவனுல் ஆபத்துவரக்கூடும் என்று நாங்கள் அஞ்சுகிருேம் என்பதன்றி வேறுபதில் கிடையாது.

அரசியல் வட்டாரத்தினருக்கு மட்டுமே இது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுவந்தது.

கி. மு. 508-ம் ஆண்டில் இதுபோன்ற நடவடிக்கை துவக்கப்பட்டு, பலர் நாடுகடத்தப்பட்டனர். இந்தமுறை கேடான நடவடிக்கையின் காரணமாக, நல்லவர் பலர் விரட்டி அடிக்கப்பட்டதால், நாட்டுக்கே நாசம் ஏற்படு வதை மெள்ள மெள்ள உணர்ந்த பிறகு 417-ம் ஆண் டிலே இந்த நடவடிக்கையைக் கைவிட்டனர்.

தெமிஸ்டாக்லிஸ், அரிஸ்டிடிஸ், போன்ற புகழ்மிக் கோர் பலர் இத்தகைய நடவடிக்கையால் ஆதென்சு நகரைவிட்டு விரட்டப்பட்டனர்.

தம்பி! ஒருவருக்கும் ஒருகெடுதலும் செய்யாதிருந்த நிலையில், எவரும் அருவருக்கத்தக்க, வெறுக்கத்தக்க

எத்தகைய செயலையும் செய்தறியாத என்னை, என் தொகுதி மக்கள் ஆதரிக்கமுடியாது என்று கூறியது அறிந்தபோது எனக்கு இந்தக் கிரேக்கநாட்டு நடவடிக்கைதான் நினைவிற்குவந்தது.

அப்பப்பா அவன் செய்த அக்ரமத்துக்கு, இந்தத் தண்டனைதான் சரியானது என்றோ,

ஒருவனை மதித்தானா, ஒருவரிடம் மரியாதைகாட்டினானா; எத்தனை மண்டைக்கனம் அவனுக்கு; அதனால் தான் மக்கள் அவனை மட்டந்தட்டினார்கள் என்றோ,

ஊரை மிரட்டிக்கொண்டிருந்தான், உள்ளதெல்லாம் தனக்குத்தான் என்று அள்ளிக்கொண்டிருந்தான், ஆகவேதான் அவனைக் கீழே இறக்கிவிட்டார்கள் என்றோ,

என்னைத் தோற்கடிக்கவே கங்கணம்கட்டிக் கொண்டு வேலை செய்தவர்கள்கூடக் குறைகூறமாட்டார்கள். என்னிடம் இன்ன குறை உளது என்று சுட்டிக்காட்ட முடியாது.

ஏறக்குறைய, கிரேக்க நாட்டு நடவடிக்கை போலவே இங்கு நடந்தது என்று கூறலாம். நல்லவன் தான்! எவருக்கும் எந்தத் தீங்கும் செய்யாதவன்தான்! அதனால்தான் நல்லவன் என்று பெயர் பெற்றுவருகிற ஒருவனை இப்படியே வளரவிடக்கூடாது என்று எண்ணுகிறோம் என்று என் தொகுதியில் என்னை எதிர்த்து வேலை செய்தவர்கள் கூறவில்லையே தவிர, அவர்களின் மனதிலே இருந்த எண்ணம் இதுபோன்றதுதான் என்பதிலே ஐயமில்லை.

அவன் சட்டசபை சென்றால் நன்றாக வாதாடுவான்—என்று அவர்களிலேயே ஒருவர் கூறுவார். மற்றவரோ, அதற்காக அவனேதான் போகவேண்டுமா? ஒரு முறைதான் போனானே போதாதா? இந்த முறை வேறு ஒருவர்தான் போகட்டுமே? இவனுக்கே இது பட்டாவா? என்று கேட்பார். இப்படி ஒரு விசித்திரமான மனப்பான்மை வளர்ந்திருப்பது எனக்குப் புரியாமலில்லை. இந்த மனப்பான்மையை ஆளுங் கட்சியினர், குறிப்பாக அமைச்சர்கள் தக்க விதத்தில் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. தட்டிக்கொடுத்து வேலை வாங்கினார்கள்; தடவிக்கொடுத்துப் பலன் பெற்றார்கள். இது தேர்தலின்போது மட்டும் கையாளப்பட்ட முறை அல்ல. திட்டமிட்டுச் செய்யப்பட்ட முறை, நீண்ட காலமாகவே.

காஞ்சிபுரம் தொகுதி கடந்த இரண்டு முறைகளும் காங்கிரசை தோற்கடித்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியினருக்கு—அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவுதான்—இந்த மனப்புண் அவ்வப்போது எரிச்சலைக் கிளப்பியபடி இருந்துவந்தது.

இம்முறையும் காங்கிரசு தோற்றுவிட்டால், இனி என்றென்றும் காஞ்சிபுரம் தொகுதி காங்கிரசுக்குக் கிட்டாது என்ற கிலி ஏற்பட்டுவிட்டது.

இதனையும் அமைச்சர்கள் தக்கமுறையில், பயன்படுத்திக் கொண்டார்கள்.

இம்முறை எவ்வளவு செலவிட்டாகிலும், என்னை வீழ்த்திக் காங்கிரசுக்கு வெற்றிதேடிவிடவேண்டும் என்பதனைத் திட்டமிட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளாகவே பணியாற்றினர்.

பழங்குடி மக்களிடம் பழகி, ஒவ்வொரு சேரிக்கும் சென்று, மாடு வேண்டுமா, மனைக்கட்டு வேண்டுமா, கடன் வேண்டுமா, வேலை வேண்டுமா, என்று கேட்டு, வாக்களித்து, சிறு சிறு சலுகைகள் செய்துகொடுத்து, ஆள் பிடிக்கும் வேலை, எனக்கு எதிராக அவர்களைத் திருப்பிவிடும் வேலை, கழகத்துக்கு எதிர்ப்பு ஏற்படுத்தும் காரியம், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வந்தது.

நாள்தோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கழக வேலையாகச் சுற்றிக்கொண்டிருந்தேன் என்றாலும் வாய்ப்புச் சிறிது அளவு கிடைக்கும்போதெல்லாம், தொகுதியில் நான் சென்று பார்த்ததில், இது எனக்குப் புரிந்தது; நமது கழகத் தோழர்களிடம் இதனை அவ்வப்போது எடுத்துக்கூறியும் வைத்தேன். நான் நேரில் விளக்கம் கூறக் கேட்கும்போது பல இடங்களிலே, நிலைமை புரிந்தது.

இவர் ஒருவர் இருப்பதனால்தான் இதுவாவது நடக்கிறது.

இவருக்குப் பயந்துகொண்டுதான் இது வேண்டுமா, அது வேண்டுமா என்று வந்து வந்து கேட்கிறார்கள்.

இவர் சட்டசபையில் நமக்காக வாதாட வாதாடத்தான் மாடுவேண்டுமா, மனைக்கட்டு வேண்டுமா என்று கேட்கிறார்கள்.

என்று எண்ணியவர்களும் கூறியவர்களும், என் தொகுதியில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், தொடர்ந்து அவர்களிடம் காங்கிரசால் ஏவிவிடப்பட்டவர்கள் கலகம் மூட்டியபடி இருந்தால், அவர்கள் மனதிலே என்பேரில் ஒரு கசப்புணர்ச்சி ஏற்படாதா? ஏற்பட்டுக்கொண்டு வந்தது. எனக்கு அது புரியவும் செய்தது. நமது கழகத் தோழர்களிடம் எடுத்துக் கூறினேன். அவர்கள் அதனை நம்பவில்லை. அவர்

களுக்குப் பாவம் என்மீது இருக்கும் பற்றும் பாசமும், மதிப்பும் மரியாதையும்,

நாட்டுக்காகப் பாடுபடுகிறவர்

நாடுமீளப் பாடுபடுகிறவர்

இவர்மீதாவது, கசப்பு வளருவதாவது, என்ற எண்ணம் கொள்ளச் செய்தது. அவர்கள் ஒன்றினை மறந்தார்கள்; நான் நாட்டு விடுதலைக்காகப் பணியாற்றுவதனைக் கவனித்து, மற்றப்படி என் மூலமாகத் தமக்கு வேறு எந்தவிதமான உதவிகளும் தேவையில்லை, என்று எண்ணத்தக்க நிலையில், தொகுதி மக்கள் இல்லை என்பதனைப் புரிந்துகொள்ளவில்லை. நமது கழகத் தோழர்களுக்கு இருந்து வந்த எண்ணமெல்லாம்,

ஐந்தாண்டுத் திட்டத்தின் ஊழலைக் கண்டிக்கிறார்.

விலை ஏற்றத்தைக் கண்டிக்கிறார்.

வரிக்கொடுமையை எதிர்த்துப் போராடுகிறார்.

இந்தி திணிப்பைத் தடுத்து நிறுத்துகிறார்.

இவ்வளவு அரிய பணியாற்றிவரும் கழகத்தைக் கட்டிக்காத்து வருவதுடன், கலாம் விளைவதைத் தடுத்து நிறுத்தி, நல்ல வளர்ச்சி ஏற்படச் செய்து, இந்திய துணைக்கண்டத்திலேயே, கழகம் என்றால் ஓர் கேள்விக்குறி என்ற நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார்; இப்படிப் பாடுபட்டுக்கொண்டு வருகிறவரிடம் நாளுக்கு நாள் பற்றும் பாசமும் மதிப்பும் மரியாதையும் அதிகமாக வளருவதுதானே முறை எனவே, ஆதரவு முன்பு இருந்ததைவிட இம்முறை எவர் தடுத்தாலும் அதிகமாக இருந்தேதீரும் என்று எண்ணிக்கொண்டனர்.

இதனை அவர்கள் பல கூட்டங்களில் எடுத்தும் கூறினர்.

அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டவர்கள் ஆம்! ஆம்! என்றனர்; ஏன் எனில் அவர்களே அந்தக் கருத்துக்கொண்டவர்கள். ஆனால் அந்தக் கருத்து கொள்ளாதவர்கள், காங்கிரசால் ஏவிவிடப்பட்டவர்களின் கலகப் பேச்சுக்கு இரையாகி, மனம் குழம்பிப் போயிருந்தவர்கள், அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டவர்கள் அல்ல. கூட்டம் நடந்த இடம், காஞ்சீபுரம். காங்கிரசால் ஏவிவிடப்பட்டவர்களின் கலகப்பேச்சினால் என்னிடம் கசப்புணர்ச்சி கொண்டவர்கள் இருந்த இடம், கிராமங்கள். இந்த நிலைமையைத்தான் நமது தோழர்கள் புரிந்துகொள்ளத் தவறிவிட்டனர்; தடுத்து நிறுத்தவும், திருத்தவும் முடியவில்லை; தேர்தல் நேரத்து வேலை, கடினம் எனினும் இதற்கு அது பயன்படவில்லை.

காங்கிரசினால் ஏவிவிடப்பட்டவர்கள், திட்டமிட்டு மெள்ள மெள்ள, கழகத்தின்மீதும் என்மீதும் கசப்புணர்ச்சியை மூட்டிக்கொண்டு வந்ததை, உடனுக்குடன் தடுத்து நிறுத்த, நமது கழகத் தோழர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருந்திருந்தால், தேர்தல் நேரத்தில் 'ஜுரவேகத்தில்' வேலை செய்திருக்கத் தேவையே ஏற்பட்டிருக்காது.

என் தொகுதியின் நிலைமை மட்டுமல்ல; சென்ற முறை கழகம் வெற்றிபெற்ற எல்லாத் தொகுதிகளிலும் இருந்துவந்த நிலைமையைத்தான், காஞ்சிபுரம் தொகுதியைச் சுட்டிக்காட்டுவதன்மூலம் எடுத்துரைக்கிறேன். செய்யத் தவறிவிட்டதற்காக வருத்தம் தெரிவிக்க அல்ல; இனி இவ்விதம் வேலைத் திட்டம் வகுத்துக்கொண்டு பணியாற்ற வேண்டும் என்பதனை நினைவூட்ட.

தம்பி! இன்று நாடு உள்ள நிலையில், எல்லா மக்களும், தூய அரசியல் தத்துவங்களை மட்டுமே மனதில் கொண்டு, தமது ஆதரவைத் தர முன்வருவார்கள் என்று எண்ணிக்கொள்ளக் கூடாது.

நாடு பிரிகிறபோது பிரியட்டும், அதனால் கிடைக்கக்கூடிய நல்லவை அப்போது கிடைக்கட்டும், இப்போது வீட்டு விசாரம் போக வழி என்ன? என்று கேட்பது தான், நூற்றுக்கு எண்பது பேருடைய இயல்பாக இருக்கும்; இங்குமட்டுமல்ல, ஜனநாயகம் பல நூற்றாண்டுகளாக நடைமுறையாக இருந்துவரும் நாடுகளிலேயேகூட.

உடனடியாகக் கிடைக்கும் உதவிகள் கடுகளவு எனினும் பெரிதாகத்தான் தோன்றும். தொடர்ந்து பணியாற்றிப் பெறக்கூடியது, நிலைத்து நிற்கக்கூடிய, நிலையை மாற்றி அமைக்கக்கூடிய பலனாக இருக்கும் என்பதற்காக உடனடியாகக் கிடைக்கும் பலனை இழந்துவிட சராசரி மக்கள் முன்வரமாட்டார்கள். அவர்களின் 'ஆசாபாசங்களை' நாம் தம்பி! அலட்சியப்படுத்துவதோ, அவைகளை அவர்கள் பெற வழிகாட்டுவதில் அக்கரையற்று இருப்பதோ, சரியல்ல, முறையுமாகாது.

என்ன அண்ணா! செய்யலாம். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களால்தானே, சிறு சிறு சலுகைகளை, உடனடி உதவிகளைச் செய்துதர முடியும்; நாமோ எதிர்க்கட்சியாயிற்றே, என்ன செய்திட முடியும், எந்த அதிகாரி நமக்காகச் சலுகை காட்டுவார், எப்படி நாம்

மக்களுடைய சிறு சிறு தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கமுடியும் என்று கேட்கிருய். தெரிகிறது. நான் தம்பி! உன்னுடைய இந்தக் கேள்வி, பொருளற்றது என்றும் கூறிவிடவில்லை; பொறுப்பற்றது என்றும் தள்ளிவிடவில்லை; இதனை நான் அறியவில்லை என்றும் எண்ணிவிடாதே. எனக்கே இது தெரியும்.

காஞ்சிபுரம் நகரில் ஒரு புதிய கூட்டுறவு நெசவுச் சங்கம் அமைக்கவேண்டும் என்று, நமது தோழர்களிலே சிலர் என்னை அணுகினர்கள். நான் தொழில் அமைச்சரைக் கண்டு பேசினேன்; ஒரு முறைக்கு மும்முறை; ஆனல் காரியம் பலிக்கவில்லை.

உனக்கே இது என்ருல் எங்கள் பாடு இன்னும் கஷ்டம்தானே, என்று கேட்கிருய். உண்மை, தம்பி! ஒப்புக்கொள்கிறேன்; ஆனல் உடனடியான சலுகைகளை, உதவிகளைப் பெற்றுத் தரமுடியாமல் போய்விட்டாலும், மக்களிடம் நிலைமையை விளக்க, சர்க்கார் மூலமாக இல்லாதுபோயினும், பொதுமக்களிடம் ஆதரவு திரட்டி உதவிகள் பெற்றுத்தர, நாம் முனைந்தது உண்டா என்பதை எண்ணிப்பார், தம்பி! இல்லை என்பது விளங்கும்.

கைத்தறித் துணியினைத் தலைமீது சுமந்து விற்ரேம்—சர்க்கார் துணையுடன் அல்ல.

புயல் அடித்தபோது நிதி திரட்டி உதவி அளித்தோம்—சர்க்கார் கைகொடுத்ததால் அல்ல.

மாநாடுகள் நடத்துகிறேம் — மகத்தான கலை நிகழ்ச்சிகள் நடாத்துகிறேம்—சர்க்காரின் ஒத்துழைப்புடன் அல்ல! சொல்லப்போனல் அதிகார வட்டாரம் கொடுக்கும் தொல்லைகளையும் தாங்கிக்கொண்டு.

இதுபோல, தொகுதிகளின் நிலைமைக்கான காரியத்தில் நாம் ஈடுபட்டு ஓரளவு வெற்றி கண்டிருக்க முடியாதா என்பதை எண்ணிப்பார்த்தால், உண்மை விளங்கும்.

கழகம் உமக்காக என்னென்ன திட்டமிடுகிறது தெரியுமா?

கழகத்தார், உமக்காகச் சட்டசபையிலே என்னென்ன கூறியிருக்கிருர்கள், தெரியுமா?

கழகத்தவர்கள், உங்கள் சார்பில், அமைச்சர்களை எப்படி எப்படித் தட்டிக் கேட்கிருர்கள் தெரியுமா?

என்று, தம்பி! தேர்தல் நேரத்தில் எல்லா இடங்களிலும் ஆர்வத்துடன் பேசுகிருய்; ஆனல் தேர்தல் சூழ்நிலை இல்லாதபோது, கிராமத்து மக்களுக்குத் தெளிவு அளிக்க, கசப்புணர்ச்சி நீங்க, நடத்திய பிரச்சாரக் கூட்டங்களின் எண்ணிக்கை என்ன? வருத்தப்படுத்தக் கூறவில்லை; என்னையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். மிகக் குறைவு.

தொகுதிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினருக்கு, அந்தத் தொகுதியிலே, ஆதரவு வளரவேண்டுமானல், கசப்புணர்ச்சி வளராமல் இருக்கவேண்டுமானல், உறுப்பினர் மட்டுமே அந்தக் காரியத்தைக் கவனித்துக்கொள்ளுவார் என்று இருந்துவிடக்கூடாது; அவர் சார்பில், தொகுதியிலே தொடர்பு வைத்துக்கொண்டு, அவ்வப்போது நல்லுரை வழங்கவும், தெளிவுரை கூறவும், இயன்ற அளவு உதவிகளைத் திரட்டித் தரவும், பணியாற்ற, அந்தத் தொகுதியிலே கழகத்தவர் கொண்ட குழு ஒன்று பணியாற்றித் தீரவேண்டும். தொகுதி உறுப்பினர் தொகுதிப் பணியினைப் பார்த்துக்கொள்ளட்டும் என்று கழகத்தவர் ஏதும் செய்யாது இருந்துவிட்டால், கசப்புணர்ச்சி உறுப்பினர்மீது மட்டுமல்ல, தம்பி! கழகத்தின்மீதும் வளர்ந்துவிடும்.

சென்ற முறை நமது கழகத்தவர் வெற்றிபெற்றிருந்த தொகுதிகள் அவ்வளவிலும் இம்முறை வெற்றி கிட்டாததற்கு இதுவே காரணம் என்று நான் கூறுவதாக தப்பர்த்தம் செய்துகொள்ளாதே. காஞ்சிபுரம் தொகுதியிலே இது மிக முக்கியமான காரணமாக அமைந்திருந்தது; மற்றத் தொகுதிகளிலே, தோல்விக்கான பல காரணங்களிலே இதுவும் ஒன்று.

இதனைப் புரிந்துகொள்ள, அந்தத் தொகுதிகளிலே உள்ள சிற்றூர்களிலே, கழகத் தோழர்கள் எத்தனை இடங்கட்குச் சென்றுவந்தனர், எத்தனை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று கணக்கெடுத்துப் பார்க்கவேண்டும், தம்பி! கோபிக்காமல், வருத்தப்படாமல். பிற, அடுத்தகிழமை.

அண்ணன்,

அண்ணாதுரை

# வாழ்ந்த குடி

— [கனகு] —

## ஒரு கணம்

இது பெரிய தொடர்கதையல்ல. நெடிய சிறுகதையுமல்ல. விடுதலைப் பாசறையின் அன்றாட நிகழ்ச்சிகளில் ஒன்று. சற்றே சுவையுடையதாக இது தோன்றியது. நல்லதொரு படிப்பினையாக இது தென்பட்டது. எனவே உங்கள் முன் வைக்கிறேன்.

விடுதலை வழி செப்பனிடப்பட்ட சாலைப்பாதையாகவா இருக்கும்? ஒற்றையடிப் பாதையைக்கூட கண்ணுக்கெட்டியவரை காண முடியாதே!—எங்கணும் சருக்கல்! எங்கணும் பள்ளம்! படுகுழி! எங்கணும் கள்ளியும். முள்ளும் பின்னிப் பிணைந்து கிடக்கும் காடு. தரையெல்லாம் பெருங்கொடுக்குடைய தேள், பூரான், குருதியுறுஞ்சும் அட்டை. கொடிய நச்சுப் பாம்புகள். பறப்பனவெல்லாம் கழுகுக்கூட்டம்! ஒலி எழுப்புவன எல்லாம் ஊளையிடும் நரி! அலறும் ஆந்தை! 'சிங்கம் வரும்! அதை எதிர்த்துச் சாடலாம்' என்று செருக்குநடைபோடுவோம்! அங்கே சிங்கம் வராது! சிறுநரி வந்து ஏமாற்று வித்தை காட்டும்! சற்றுத் தவறினால் போதும்! பார்வை மாறினால் போதும்! அங்கே மணல் தூவப்பெற்ற பொய்ப்பந்தல் நன்மேடாகத் தென்படும்! அதில் காலை வைத்துவிட்டாலோ! அவ்வளவுதான்—படுபாதாளம்! பின்னர் விடுதலை விரும்பிகளின் முன்னால் கெடுதலை விரும்பிதோன்றி நிற்க நேரிடும்! ஆகவே. விழிப்புத் தேவை. விடுதலை வீரனுக்கு விழிப்பு! அது இன்றேல் வருவது பழிப்பு! எதிர்பாராததுகள் எல்லாம் இன்னலாக வந்து நிற்கும்! எதிர்பாராதவர்கள் எல்லாம்எதிரிகளாக வந்து முளைப்பர். விடுதலை எனும் இன்ப வீட்டினை. எழில் வீட்டினை அடையும் வரை வீரனுக்கு வேண்டுவது விழிப்பு, விழிப்பு. விழிப்பு! அதற்கோர் படிப்பினை இங்கே சொல்லப் போகும் நிகழ்ச்சி. வாசகர்களே,-விடுதலை விரும்பிகளே! அல்லது போற்றுவோர்! நல்லதை ஏற்றுக் கொள்க!

•

"அதோ வாசு வருகிறான். அவன் என்னிடம் பேசினால் என்ன செய்வது? அவனிடம் பேசாமல் நான் எப்படிப் போவது? அவனிடம் பேசாமல் நான் போக முடியுமா?" எதிரே தன் நண்பன் வருவதைப் பார்த்ததும் கார்த்திகேயன் உள்ளத்தில் நடுக்கந்தான் ஏற்பட்டது. பாவம் என்ன செய்வதென்று தோன்றவில்லை அவனுக்கு. தலையைக் கீழே போட்டுக்கொண்டு, அதாவது தரையை நோக்கிய வண்ணம் அவன் நடந்தான். எதிரே வந்துகொண்டிருக்கும் தன் அருமை நண்பன் வாசுவிடம் பேச்சுக் கொடுக்காமல் போகவேண்டியிருக்கின்றதே என்ற கலக்கத்தோடு, கவலையோடு உள்ளம் தடுமாறத் தன்பாட்டில் நடந்தான்.

எதிரே வந்துகொண்டிருந்த வாசுவோ அங்குமிங்கும் பராக்குப் பார்த்துக்கொண்டே வந்தான். தனக்கு எதிரில் தன் நண்பன் கார்த்திகேயன் வந்துகொண்டிருக்கிறான் என்பதை — அறிந்து கொள்ளாமலே நடந்துகொண்டிருந்தான்,

எங்கெங்கோ போய்விட்டு மீண்ட அவன் பார்வை சட்டென்று எதிர் சாரியில் படிந்தது. அங்கே கார்த்திகேயன் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான் — அவனைக் கடந்து, குனிந்த தலை நிமிராமல்.

"அடடே, கார்த்தி போகிறானே!" உரக்கச் சொல்லிக்கொண்டான் வாசு. அப்படியே நின்றுவிட்டான். "கார்த்தி, ஏ கார்த்தி!" வாயால் அழைத்தது போதாதென்று கைகளையும் ஓங்கித் தட்டி ஒலி எழுப்பினான்.

திரும்பிப் பார்க்கவேண்டுமே கார்த்தி! அவன் பார்க்கவில்லை. குனிந்த தலை நிமிரவில்லை! தன் பாட்டில் அவன் போய்க்கொண்டேயிருந்தான்.

வாசு அதிசயப்பட்டு நின்றான். 'நான் அத்தனை உரத்து அழைத்தேனே! அது அவன் காதில் படாமலா இருந்திருக்கும்! நான் எழுப்பிய ஒலி செவிடன் ஒருவன் காதிற்கூட நன்றாகப் போய் விழுந்திருக்குமே! என குரல் கேட்ட பிறகுமா கார்த்தி என்னைத் திரும்பிப் பார்க்காமல் போகிறான்! இது விந்தையாக இருக்கிறதே!' வியப்பா, ஏமாற்றமா, கவலையா என்று தோன்றாத நிலையில் அடித்துவைத்த சிலைபோல் அந்த இடத்தில் அப்படியே நின்றுவிட்டான் வாசு.

கார்த்தியோ தன்பாட்டில் ஒன்றும் தெரியாதவன்போல் சிறிது தூரம் நடக்க முயன்று நடந்தான். அவன் கால்கள் பின்னுக்கிழுத்தன. வாசுவிடம் முகம் கொடுக்காமல், அவனை அலட்சியம் செய்ததுபோல், நிமிர்ந்து பார்க்காமல், அவன் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியும் பெருமுயற்சியோடு எடுத்து வைக்கப்பட்ட அடிதான் அப்படி அவனால் மேலே நடந்துகொண்டே இருக்க முடியவில்லை. தன்னையறியாமல் நின்றான், பின்னால் திரும்பிப் பார்த்தான். 'அதோ வாசு இன்னும் என்னைப் பார்த்துக்கொண்டே நிற்கின்றானே!'

உயிர் நண்பர்கள் என்று இருவரைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், வாசுவையும், கார்த்திகேயனையும்தான் சுட்டிக் காட்ட வேண்டும். சுட்டிக்காட்ட முடியும்.

ஒரு காலத்தில், அதாவது ஐந்தாண்டுகளுக்கு முன்னே கார்த்தி கூடச் செல்வச் சிறப்பிலிருந்தவன் தான். அது, அவன் உழைக்காமலிருந்த காலம். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலம்.

கார்த்திகேயனின் தந்தை— எத்தனை ஆசை அவருக்கு! தன் மகன் பெரிய படிப்பாளி என்ற பெயரோடு பட்டம் பெற்று வந்து விட வேண்டும். தன் வாழ்க்கையின் பெரிய வெற்றியின் முழு நிறைவு அதோடு வந்து கிட்டிவிடும் என்று அவர் ஓயாது, ஒழியாது எண்ண மிட்டு வந்தார். அந்த வழியில் செயல்பட்டுக்கொண்டே இருந்தார். அந்த எண்ணத்தோடு, பேரவா வோடுதான் அவர்தம் தொழிலில் மிகத்தீவிரமாக முனைந்து உழைத்து வந்தார்—மகனின் பெரிய படிப்புக்கு நிறைய ச் செலவாகுமல்லவா— அந்தப் பொருளைச் சேர்ப்பதற்கு. ஆனால்,

தாம் ஒன்றை ஆசையோடு எதிர் பார்க்க, நடப்பது ஒன்ருக இருக்கும் என்று அந்தத் தந்தை நினைக்கவே இல்லை. திடீரென்று அவர் வாணி பத்தில் ஒரு பெரிய மாற்றம் உண்டாயிற்று. மெல்ல மெல்லப், படிப்படியாக முன்னேறி வந்துள்ள அவர்தம் வாணிபத்தை. அந்த மாற்றம் அவ்வளவு விரைந்து பின்னல் தள்ளும் என்று அவர் எண்ணவே இல்லை.

இன்னும் இரண்டு ஆண்டுகள் கார்த்தி கல்லூரியிற் படித்தாக வேண்டும். 'ஐயோ, என் வியாபாரம் இன்னும் இரண்டாண்டுகளுக்கு எப் போதும்போல் நடைபெற்றுவிடக் கூடாதா? என் பிள்ளை பட்டம் பெற்றவனுகி வெளிவருவதை என் கண்ணுல் நான் காண்பதற்கு வழி ஏற்படக்கூடாதா?' என்று ஓயாமல், ஒழியாமல் எண்ணி எண்ணி, வேண்டாத தெய்வத்தையெல்லாம் வேண்டி வேண்டிப் பெருங்கலக்கத் தில் ஆழ்ந்துவிட்டார் அவர். ஒரு மனிதனின் முயற்சியையும், ஆற்றலையும் குறைத்துச் சிதைத்து உருக்குலைக்கும் வல்லமை அவ னுடைய மன வேதனையைத் தவிர, வேறு எதற்குமே அவ்வளவு சிறப் பாக இருக்க முடியாது என்பது உலகு கண்ட முடிவல்லவா! பாவம், கார்த்திகேயனின் தந்தை தன்னம் பிக்கை இழந்தவரானுர். அந்தத் தன்னம்பிக்கை இழப்பு அவருடைய உள்ளக்கலக்கத்தைப்பெருக்கிற்று. அந்தக் கலக்கம் அவரைக் குழப்பத் தில் ஆழ்த்திற்று. அந்தக் குழப்பத் தில் எதை எப்படிச் செய்வது என் பதே தோன்ருதவராக ஆகிவிட்டார் அவர். 'ஐயோ, என் பிள்ளை பட்டம் பெற்றவனுவதை என்னுல் பார்க்க முடியாதுபோலிருக்கிறதே! ஐயோ என்ன செய்வேன்! என்ன செய் வேன்!' என்ற அவர் உள்ளக் கதறல் உடல் நலிவைத் தந்து பெருக்குவதற்குச் சித்தமாகி விட்டது.

அந்த ஆண்டு முழுதும் கார்த்தி கேயனுல் ஊருக்கு வர முடியவில்லை. அந்தத் தந்தை எப்படி எப்படி எல்லாமோ துன்பத்துக்காளாகிய வண்ணம் பிள்ளைக்கு மாதந்தவருமல் பணம் அனுப்பிக்கொண்டு வந்தார். வீட்டு நிலையை, தன் தந்தையின் வாணிப நிலையை கார்த்தியால் அறிந்துகொள்ள முடியவில்லை. எப்படியிருந்தாலும் ஊர், உலகம் தெரியாத சிறுவன்தானே அவன். கல்லூரி விடுமுறை வந்தது. கார்த்தி கேயன் தன் வீட்டுக்கு வந்தான். தன்னையே அவனுல் நம்ப முடிய வில்லை. தன் கண்கள் காட்டும் காட்சியை அவனுல் புரிந்துகொள்ள முடியவில்லை தன் வீடு, அதன் சுற்றுப்புறம் சொல்கின்ற கதைகள் எல்லாம் புதுக் கதைகளாக இருந்தன. தன் தந்தையின் நிலை அப்படி மாறியிருக்கும் என்று கனவிற்கூடக் கருதியிருக்க மாட்டான் அவன்.

"ஏனப்பா இந்த நிலை? எப்படி யப்பா நம் குடும்பம் இப்படிப்பட்ட தாழ்வுக்கு வந்தது?" என்று வாய் திறந்து கேட்கவில்லை கார்த்தி கேயன் தன் தந்தையிடம். அவன் தன் தந்தையைப் பரிதாபகரமாகப் பார்த்த பார்வை, அவர் எதிரிலே நின்ற நிலை அப்படி அவன் வினவிக் கொண்டு நிற்கிருன் என்று எடுத் துச்சொல்லின.

அந்தத் தந்தை எண்சாண் உடம் பும் ஒரு சாணுகக் கூனிக்குறுகிப் போனுர் தன் அருமை மகனை, ஆசை மகனை நேரில் பார்த்தபோது. "மகனே, ஓராண்டுக்கு முன்னர் நீ இங்கிருந்து உன் படிப்புக்காகச் சென்னைக்குப் போனபோது, நம் குடும்பநிலை உள்ளுக்குள் இதே வறிய நிலையில்தான் இருந்தது. நான் செய்துவந்த வாணிபம் இழப்பு களைக்காட்டி இறங்குமுகமாகிக் கொண்டுதான் இருந்தது. ஆனுல், அப்போது அந்த நிலையை உன்னிட மிருந்து என்னுல் மறைக்க முடிந் தது. அப்போது என்னிடம் ஒரு தெம்பு இருந்தது—அந்த ஆண் டுக்குள் இழப்புகளுக்கு ஈடு கொடுத்துவிட முடியும்; குறைவு களுக்கெல்லாம் நிறைவு கண்டுவிட முடியும்; வாணிபத்தைச் சரியான நிலைக்குக் கொண்டுவந்துவிட முடி யும் என்ற தெம்பு. ஆனுல், மகனே, அருமை மகனே, எதிர்பார்த்தபடி எதையும் செய்ய முடியவில்லை என் னுல். எதிர்பார்த்தது ஒன்றுமே நடந் தேறவில்லை. இழப்பு இழப்பாகவே தொடர்ந்தது. துன்பமோ, இன் பமோ எதுவரினும் பல முனைகளைச் சேர்த்துக்கொண்டுதான் வரும் என்று சொல்வார்கள். இன்பத் தைப் பொறுத்தவரை அது எப் படியோ—எனக்கு நினைவில் இல்லை, இதோ இப்போது வந்திருக்கும் துன் பம் எல்லா வழிகளிலிருந்தும் தீவிர மாகப் படையெடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. வாணிபத்தில்— என்னுடைய நிலையைக்கண்டோ என்னவோ — திடீரென்று வாடிக் கைக்காரர்கள் எல்லாரும் மாறிவிட் டார்கள். நான் பற்று வரவு வைத் துக்கொண்டிருந்த பெரு வணிகர் இருவர் எதிர்பாராதவிதமாக வேறு தொழிலில் ஈடுபட்டுவிட்டார்கள். அவர்களிடமிருந்து பொருள் உத வியோ, வேறு உதவியோ எனக்கு இல்லை என்ற நிலை வந்துவிட்டது. எனக்குக் கடன் உதவிபுரியக்கூடிய இரண்டொருவர் இருந்தார்கள். ஏனே, எதற்கோ அவர்கள் எல்லாம் என்னேடு கொண்டிருந்த நட்பை முறித்துக்கொண்டுவிட்டார்கள். உனக்குத் தெரியுமே, நான் செய் தது கடன் வியாபாரம் என்று. நமக்கு வரவேண்டிய நிலுவைகள் நிரம்ப இருக்கின்றன. அந்தப்பாக்கி கள் வந்தாலே பத்தாண்டுக்குமேல் வேறு வாணிபம் ஏதும் புரியாமல் நம் குடும்பத்தைச் சிறப்பாக நடத் திக்கொண்டு போகமுடியும். உன் னைக்கூட நன்ருகப் படிக்க வைத்து விட முடியும். ஆனுல், அப்படி வர வேண்டி — தரவேண்டிய பாக்கிக் காரர்கள் ஒருவரைக்கூடக் கண் ணுல் பார்க்க முடியவில்லை. அப் படியே இரண்டொருவரைத் தப்பித் தவறிப் பார்த்தாலும், அவர்கள் சும்மா சாக்குப்போக்குச் சொன் னுல் போதாதென்று என்னுடன் சண்டைக்கே வருகிருர்கள். அதே சமயம் நாம் திரும்பத் தரவேண்டிய பாக்கிகளும் உண்டல்லவா! அப் படிக் கடன்கொடுத்தோர் சும்மா என்னைத் துளைத்துமட்டுமா எடுத் தார்கள்! என்னைச் சித்திரவதைக்கு மேலாகப் படுத்தாதபாடெல்லாம் படுத்திவிட்டார்கள். அந்தப் பெருந் துன்பம் பொறுக்கமுடியாத கார ணத்தால்தான் நம் பூர்வீகச் சொத் தான தோட்டம் துரவுகளைக்கூட விற்றுவிட்டேன். கடையை அடைவு வைத்துவிட்டேன். வீடுகளைவிற்று விட்டேன். இதோ, நாம் குடியிருக் கும் இந்த வீடுகூட அடமானத்தில்

தான் இருக்கிறது'' என்று அந்தத் தந்தை வாய்திறந்து தன் தனயனிடம்சொல்லவில்லை. அவர் கார்த்திகேயனைப் பார்த்த பார்வையும், கார்த்தி அங்கே பார்த்த ஒவ்வொன்றும் உரைத்த கதையும் அவற்றையெல்லாம் அங்கே உறுதிப் படுத்தின.

எதிரி என்று யாருமே இல்லை என்ற நிலையோடு, நிம்மதியோடு, உயரப்பறந்துகொண்டிருந்த வானூர்தியில் சென்றுகொண்டிருந்த வீரன் ஒருவன் — திடீரென்று, நடுவானத்தில் அந்த ஊர்தி பறந்துகொண்டிருந்தபோது நாலாபுறங்களிலிருந்தும் அதனை வெடிகுண்டுகள் வந்து தாக்க, அந்த ஊர்தி நிலைகுலைந்து, பற்றி எரிந்துகொண்டு கீழே செங்குத்தாக விழுந்துகொண்டிருக்குமானால் என்ன நிலையிலிருப்பானோ, என்ன நினைவிலிருப்பானோ அந்த நிலைக்கு, அந்த நினைவுக்கு ஆளானான் கார்த்தி. ஐயோ, அவன் எதிர்காலத்தில் எப்படி எப்படியெல்லாம் வாழவேண்டுமென்று எண்ணினான்! எத்தனை எத்தனை இன்பக்கனவுகள் கண்டுகொண்டிருந்தான்! அத்தனையும் பொய்யாய்ப், புனைகதையாய் மாறிவிட்டனவே!

அன்று கார்த்தியால் எதையும் சிந்தித்துப்பார்க்க முடியவில்லை. அன்று அவன் உண்ணவில்லை; எழுந்து உலவவில்லை; யாருடனும் உரையாடவில்லை. இரவிலோ உறக்கம் வரேன் வரேன் என்று ஓடி ஒளிந்துகொண்டுவிட்டது.

இனி, அவன் எப்படிச் சிந்தித்தாலும் ஒரு முடிவுக்குத்தானே வர முடியும்? ஏதாவது வேலை அல்லது வியாபாரம். தான்வாழ தன் குடும்பத்தைக் காக்க அவன் செய்ய வேண்டியது அதுதானே இனி. வாணிபம் செய்வது அவ்வளவு எளிதானது இல்லை. அதற்குப் பொருள் வேண்டும். எனவே, அவன்ஏதாவது வேலைசெய்து தீரவேண்டும். வேலை தேடிக் கிளம்புவதைத் தவிர வேறு வழியே இல்லை.

மறுபடியும் கல்லூரி திறப்பதற்கு ஒருவாரம் இருக்கும்போதுதான் வாசு சொந்த ஊருக்கு வந்தான். அந்த விடுமுறையில் அவன் பல இடங்களுக்குப் போய்விட்டுவந்திருந்தான். வந்ததும் வராததும்மாகக் கார்த்திகேயனைப் பார்த்தான்; அவன் ஓடோடி வந்தான்—அவன் வீட்டுக்கு.

அந்த வீட்டில் அவன் கண்ட மாறுதல்கள் அவனை நிலைகுலையச் செய்தன. கார்த்திகேயன் அப்போது வீட்டில் இல்லை. அவன் தந்தை இருந்தார். தன்னுடைய துன்பத்தை அடுத்தவரிடம் கூறுவதன் மூலம் ஓரளவு அமைதியைக் காண எண்ணியோ என்னவோ, தம் வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஆதியோடந்தமாக விவரித்துக் கூறினார் அவர் வாசுவிடம்.

“இவ்வளவையும் நான் அப்போதே விசாரித்துக்கொண்டு போகாமல் போய்விட்டேனே!” என்று வாசு தனக்குத்தானே சொல்லிக்கொண்டு வருந்தினான். “நான் வெளியூர்களிலிருந்து எழுதிய கடிதங்களுக்கெல்லாம்கூடக் கார்த்தி பதில் எழுதவில்லை. நான் நினைத்தேன், கார்த்தியும் என்னைப்போல் வெளியூருக்குப் போயிருப்பான் என்று—ஆமாம், கார்த்தி இப்போது எங்கே?”

“அவன், அவன்...”

சொல்லத் தயங்கினார் அந்தத் தந்தை.

“சொல்லுங்கள் சும்மா! ஏதாவது வேலை பார்ப்பதற்குப் போயிருக்கிறானா?”

“ஆமாம், இரண்டு வாரமாக ஏதோ ஒரு எண்ணெய் மில்லில் வேலை செய்துவிட்டு வருகிறான்!”

“எண்ணெய் மில்லிலா!”

மேலே ஒன்றும் கேட்கவில்லை வாசு 'இருங்கள் மாலை வருகிறேன்!' என்று கூறிவிட்டுப் பரக்கப் பரக்க எழுந்து நடந்தான்.

'ஒருவேளை இவன் நம் எண்ணெய் ஆலையில் வேலை செய்கிறானோ?' என்று எண்ணினான் வாசு. அந்த ஊரில் இரண்டு எண்ணெய் ஆலைகள். அதில் ஒன்று அவர்களுக்குச் சொந்தமானது.

வாசு நேரே தங்கள் எண்ணெய் ஆலைக்குச் சென்றான். அங்கே அவன் தந்தை இருந்தார்.

“இந்த வெயிலில் ஏன் இங்கே விழுந்தடித்துக்கொண்டு ஓடி வருகிறாய்? சாயந்தரமாக வருகிறது தானே! இன்றைக்குத்தானே ஊரிலிருந்து வந்தாய்!” என்று அன்புடன் கடிந்துகொண்டார் வாசுவின் தந்தை அவனிடம்.

வாசு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவனால் பதில் சொல்ல முடியவில்லை. விருவிருவென்று ஆலைக்குள் சென்றான் அவன். அவன் எதிர்பார்த்தது சரி. அவன் கண்ணில் முதலிற்பட்டவன் கார்த்திதான். தன்னை மறந்து வாசு அப்படியே நின்றான். கார்த்திகேயனைப் பார்த்துக்கொண்டே நின்றான். 'கல்லூரியிலிருந்து விடுமுறைக்கு வந்தபோது என்னென்னவெல்லாம் இவன் என்னிடம் சொல்லிக் கொண்டு வந்தான். எத்தனை புதுப் புதுத் திட்டங்கள் எல்லாம் இவன் போட்டுக்கொண்டு வந்தான். இவன் போட்ட திட்டங்களைப் பார்த்து நானே மலைத்துப்போயிருந்தேனே! இப்போது...! அவ்வளவும் தரைமட்டமாகிவிட்டனவே! அவ்வளவும் வெறும் கனவு ஆகிவிட்டனவே!' “கார்த்தி!” என்று தன்னையுமறியாமல் உரக்கக் கத்தினான் அவன். ஓடிப்போய் அப்படியே கார்த்தியைக் கட்டிக்கொண்டான் அவன்.

“நல்லவேளை, எங்கே எண்ணெய் டின்கள் தூக்கும் வேலையில் இங்கு நீ ஈடுபட்டிருக்கின்றாயோ என்று நான் பதறிக்கொண்டு ஓடிவந்தேன். என் தந்தை உனக்கு எழுதும் வேலையே கொடுத்திருக்கிறார்!” என்று தழுதழுத்த குரலிற் சொன்னான் வாசு.

“எந்த வேலையைச் செய்தால் தான் என்ன வாசு! நாம் வாழ்வதற்கு எந்த வேலையை வேண்டுமானாலும் செய்வதற்குச் சித்தமாக இருக்கவேண்டும். அப்போதுதான் இன்றைய உலகில் நாம் தலை நிமிர்ந்து நிற்கமுடியும். கடினமான வேலைகள் செய்வதற்கு ஒரு பாங்கினர்; நகத்தில் அழுக்குப்படாத வேலையைச் செய்வதற்கு மற்றொரு பகுதியினர் என்ற பாகுபாட்டு நிலை இருக்கக்கூடாது.”

“எப்படியிருந்தாலும் நீ படித்தவன். இதுவரை உடல் உழைப்பில் ஈடுபடாதவன். அதில் பயிற்சி இல்லாதவன்.”

“படிப்பையும் உழைப்பையும் இணைத்துவைத்துப் பார்க்கக் கூடாது. படிப்பு வேறு, உழைப்பு வேறு. அதேபோல் அறிவு வேறு; படிப்பு வேறு!”

“எப்படியிருந்தாலும் என் தந்தைக்கு நான் நன்றி சொல்லவேண்டும். உனக்குச் சற்றே சிரமமில்லாத இந்த வேலையைக் கொடுத்தாரே, அதற்காக.”

தன் பிள்ளையின் பின்னோடு வந்த முருகேசனார் வியப்புடன் அங்கே நிகழ்வதை நோக்கிக்கொண்டிருந்தார். அவருக்கு ஏற்கெனவே தெரியாததல்ல கார்த்திகேயன் யார் என்பது. அவன் தந்தையின் வியாபாரம் நொடித்துப்போன செய்தி அவருக்கும் மனக்கலக்கத்தைத்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

தான் தந்தது. அதனால்தான் கார்த்திக்கு நல்லவேலையாக ஒன்றை ஒதுக்கித் தந்திருந்தார் அவர்—ஏதோ நொடித்துப்போன அந்தக் குடும்பத்திற்குத் தன்னால் இயன்ற உதவி அது என்ற எண்ணத்தில். ஆனால் அவர் எதிர்பார்க்கவில்லை—கார்த்திகேயன் தன் மகன் வாசுவின் உயிர் நண்பனாய் இருப்பான் என்று.

"கார்த்தி ஒரு நிமிடமும் இங்கே நீ நிற்கக்கூடாது! வா என்னுடன், வா வா!" என்று உரத்த குரலில் ஆவேசம் பிடித்தவன்போல் கத்தினான் வாசு.

ஏன் அவன் அப்படிக் கார்த்திகேயனை அழைக்கிறான் என்று அவன் தந்தைக்குப் புரியவில்லை. கார்த்திகேயனோ 'தன் நண்பன் தன்னுடைய ஆலையில் வேலை செய்வதைத் தான் பார்த்துக்கொண்டிருப்பது தன் கௌரவத்திற்குக் குறைவானது' என்ற எண்ணத்தில்தான் அவன் அப்படி அழைக்கிறான் என்று எண்ணினான். அந்த எண்ணம் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. 'ஐயோ, இந்த வேலையில் வாசு காட்டுகின்ற கௌரவம் எங்கள் குடும்பத்தின் வாழ்வுக்கல்லவா உலைவைத்துவிடும் போலிருக்கிறது! இப்படியொரு நல்ல வேலையை இந்த இடம் தவறினால் வேறு எங்குபோய் என்னால் அடைய முடியும்!' என்று அவன் கலங்கினான்.

"வேண்டாம் வாசு! நான் இங்கே வேலை செய்வதைத் தடுக்காதே! இதை விட்டுவிட்டால், இதைப் போன்றதொரு வேலையை எடுத்த எடுப்பில் யாரும் கொடுப்பதற்கு முன்வரமாட்டார்கள். அப்படியே வேறெங்கேனும் இப்படியொரு வேலை கிடைத்தாலும் பழகாத இடத்தில், பழகாதவர்கள் எப்படி நடத்துவார்களோ! இந்த வேலை எனக்கு மெத்தப் பிடித்துவிட்டது. நான் இங்கேயே இருந்துவிடுகிறேன்" என்று தழுதழுத்த குரலில் வாசுவைப் பார்த்துக் கூறினான் அவன்.

"இல்லை கார்த்தி நான் சொல்வதை நீ கேட்டுத்தான் ஆகவேண்டும்! இனி இங்கே ஒருகண நேரங்கூட நீ வேலை செய்யக்கூடாது. நீ என்னோடு வெளியே வந்துதான் தீரவேண்டும்!"

"இதில் கௌரவக்குறைவு என்று சொல்வதற்கு ஒன்றுமேயில்லை வாசு. உண்மையில் இந்த வேலையை உன் தந்தையார் எனக்களித்ததன் மூலம் எனக்கு நல்லதொரு உதவிதான் செய்திருக்கிறார்."

"நல்லதொரு உதவி! இதுவா நல்லதொரு உதவி? உனக்கு ஆக வேண்டிய வேலைக்கு ஒரு ஆளை நியமித்து அவனுக்குக் கூலி தருவதா உதவி!—வா, வா! அதைப்பற்றிய பேச்சு ஏன் இப்போது! முதலில் நீ வெளியே வா!"

"இல்லை வாசு! இல்லை வாசு! அப்படியொன்றும் சொல்லாதே!" என்று கையைக் குவித்துக் கொண்டு வேண்டினான் கார்த்தி.

"அந்தப் பிள்ளையாண்டான்தான் இந்த வேலையிலேயே இருந்துவிடுகிறேன் என்கிறானே, அவனைப்போய் இவன் ஏன் வற்புறுத்தி அழைக்கிறான்?" என்று கார்த்திகேயனின் கெஞ்சுதலைப் பார்த்துக்கொண்டிருந்த வாசுவின் தந்தை தனக்குள் கேட்டுக்கொள்வதுபோல் மெல்ல வினவினார்.

தந்தையின் வார்த்தையே செவியில் விழாததுபோல் கார்த்திகேயனைப்பற்றிப் பரபரவென்று வெளியே இழுத்துக்கொண்டு போனான் வாசு. வேறு வகையறியாமல் கார்த்தியும் அவனைப் பின்தொடர்ந்தான். 'இருந்தாலும் இந்தப் பிள்ளையாண்டானுக்கு இவ்வளவு பிடிவாதம் கூடாது!' என்று தன் மகனைப் பற்றித் தானேவிமர்சித்தபடி நெட்டுயிர்ப்பினை விட்டபடி நின்றார் முருகேசனார்.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஏன் எனக்கு முன்னரே கூறவில்லை? நானென்ன பட்டிக்காடா?........." தொடர்ந்துகொண்டே போனாள்! "அல்லி...மன்னித்துவிடு.....நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசு...... மங்கை எனக்கு வேண்டும்......" என்று கெஞ்சினேன். சில நேரம் பேசிப் பின் சிரித்த முகத்துடன், தெளிந்தஎண்ணத்துடன் செயலாக்கத் திட்டமிட்டுப் பிரிந்தோம்.

அல்லி என்னுடைய முதல் காதலியைக் குறித்துப் பேசி என்னை மணக்க மறுத்தாளாம் தன் அப்பாவிடம்! படித்த, பண்புள்ள தனக்குப் பண்பிழந்த நான் வேண்டாமாம்! இப்படி எத்தனையெத்தனையோ என்னைப்பற்றிக் கூறினாள்; ஆமாம், அல்லி கண்ணீர் சிந்த.....அவளின் அப்பா அதில் கரைந்துவிட்டார்; எங்களின் திட்டம் வாகை சூடியது!

கடைசி நேரத்தில் கைவிட்டுவிட்ட எனது மாமாவின் செயலை எண்ணி என் அப்பா உழன்றார்; செய்வதறியாமல் திகைத்தார்! அந்தத் திகைப்பும், அவமானமும் மறையுமுன்னே எனது மங்கையைப் புழுவாக்கி அப்பாவிற்குத் தூண்டிலில் போட்டேன்; அந்த மீனும் மங்கையைப் பிடித்துக்கொண்டது!

பிறகென்ன? மங்கை...மணமகள் அல்லி...தோழி!

அன்றிரவு...! மங்கையைத் தனியாகச் சந்தித்தேன்; "என்னை வென்ற நம் குழந்தை எங்கே?" என்று கேட்டேன். 'என்னை மன்னித்து விடுங்கள், அத்தான்!' என்று துவங்கி, அது தன்னுடைய குழந்தையல்லவென்றும், முருகுவின் நண்பருடைய குழந்தைதான் தன்னைத் திருத்தப் பயன்பட்டதையும் கூறி முடித்தாள்! என்னை ஏமாற்றமும், திகைப்பும் எட்டிஎட்டி உதைத்தன! ஆமாம்... முருகுவின் நண்பரது குழந்தையா? "அவனுக்கு, என் உள்ளம் திரும்பக், குழந்தையைப் பயன்படுத்திய நண்பனுக்கு, நாம் செய்யும் கைம்மாறு என்ன மங்கை, கைம்மாறு என்ன?" என்று வினவி முடிக்கும் முன்னே "அங்கே பாருங்கள்!" என்று மங்கை காட்டிய இடத்தில் முருகு தன்னுடைய பரிசை—அல்லியை அணைத்துக்கிடந்தான். அல்லியும், முருகும் சேர்ந்துதான் என்னைத் திண்டாடவைத்தார்கள் என்ற செய்தியையும் கூறிவிட்டு, அவர்களிருவருக்கும் முன்னரே 'தொடர்பு' இருந்தது என்று மங்கை கூறுமுன் அவள் இதழை அடைத்து விட்டேன்—கையால் அல்ல......!

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.